بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 47

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஜமாதில் அவ்வல் 28

ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - நுபுவ்வத் 20 ★ 20 நவம்பர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

وَقَضٰی رَبُّکَ اَلَّا تَعۡبُدُوۡۤا اِلَّاۤ اِیَّاہُ
وَبِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا ؕ اِمَّا یَبۡلُغَنَّ عِنۡدَکَ
الۡکِبَرَ اَحَدُہُمَاۤ اَوۡ کِلٰہُمَا فَلَا تَقُلۡ لَّہُمَاۤ
اُفٍّ وَّلَا تَنۡہَرۡہُمَا وَقُلۡ لَّہُمَا قَوۡلًا کَرِیۡمًا ○

மேலும் உம்முடைய இறைவன் மிகவும் வலயுறுத்தி இவ்வாறு கட்டளையிட்டுள்ளான்: நீங்கள் அவனையன்றி வேறெதனையும் வணங்காதீர்கள். மேலும் (உங்கள்) பெற்றோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுள் ஒருவர் அல்லது இருவரும் உம்முடைய வாழ்நாளில் முதுமையை எய்தி விடுவார்களாயின், அவர்களைச் சீ என்று கூடச் சொல்லாதீர். (17;24)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து-ல்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நீங்கள் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்கக் கூடாது என்றும் பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் உமது இறைவன் விரும்புகின்றான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிருந்து……

நீங்கள் இறைவனை தவிர்த்து வேறெவரையும் வணங்கக் கூடாது என்றும் பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் இறைவன் விரும்பியுள்ளான். உண்மையில் படைத்து பரிபாலித்தல் என்ற பண்பு எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால், மனிதன் குழந்தையாக இருக்கும்போது அவன் எதற்கும் ஆற்றல் பெற்றவனாக இருப்பதில்லை. இந்நிலையில், தாயானவள் எப்படியெல்லாம் தொண்டாற்றுகின்றாள்! மேலும் தந்தையோ அந்த நிலையில் தாயின் திட்டங்களில் மிகவும் உதவியாளராக இருக்கின்றார். இறைவன் தனது தனிப்பட்ட அருளால் பலவீனமான படைப்பினங்களின் நலனை பாதுகாப்பதற்காக இரண்டு சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளான்.

தனது நேசத்தின் ஒளிகளிலிருந்து ஓர் ஒளியை பெற்றோர்களிடம் வைத்து விட்டான். எனினும் நினைவில் கொள்ள வேண்டும்.தாய் தந்தையின் அன்பானது தற்காலிகமானதாகும். மேலும் இறைவனின் நேசம் உண்மையானதாகும். உள்ளத்தில் அல்லாஹ்வின் புறமிருந்து அதற்கான எண்ணம் போடப்படாத வரை தனிநபர், ஒருவரை அவர் நண்பனாக இருந்தாலும் அல்லது சமமான அந்தஸ்து கொண்டவராக இருந்தாலும் அல்லது ஆட்சியாளராக இருந்தாலும் எவரிடமும் அன்பு கொள்ள முடியாது. மேலும் இது இறைவனின் சிறப்பான ரூபூபிய்யத் எனும் படைத்து பரிபாத்தல் பண்பின் ரகசியமாகும். அதாவது தாயும் தந்தையும் பிள்ளைகளிடம் எப்படிப்பட்ட அன்பு கொள்கின்றனர் என்றால் அவர்கள் தமது பிள்ளைகளை பராமரிப்பதில் எல்லா வகையான துன்பத்தையும் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்கின்றனர். எதுவரை என்றால் அவர்களின்

இதன் தொடர்ச்சி. 9-ம் பக்கம் ……

## பெற்றோர்களுக்கு தொண்டாற்றுவதற்கு இஸ்லாம் சிறப்பான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது

وَقَضٰی رَبُّکَ اَلَّا تَعۡبُدُوۡۤا اِلَّاۤ اِیَّاہُ
وَبِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا ؕ اِمَّا یَبۡلُغَنَّ عِنۡدَکَ
الۡکِبَرَ اَحَدُہُمَاۤ اَوۡ کِلٰہُمَا فَلَا تَقُلۡ لَّہُمَاۤ
اُفٍّ وَّلَا تَنۡہَرۡہُمَا وَقُلۡ لَّہُمَا قَوۡلًا کَرِیۡمًا ○

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கான விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஏகத்துவத்திற்கான கட்டளை வழங்கப்பட்ட பிறகு பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு நன்மையானது மற்றொரு நன்மையின் பக்கம் கவனத்தை திருப்புகின்றது.

முழுமையான வாக்கியம் இதுவாகும்;

ان احۡسِنُوۡا بِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا

அதாவது அல்லாஹ் ஒன்று இந்த கட்டளையை வழங்கியுள்ளான். அதாவது இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்க கூடாது; மேலும் பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இந்த வாக்கியம் எவ்வளவு சிறந்த வாக்கியமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வுடைய கருணைகளுக்கு பகரமாக மனிதால் எதுவும் கைமாறு செய்ய முடியாது. எனவே இறைவனைக் குறித்து இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் இறைவனுடைய கருணைக்கு பகரமாக நன்மை செய்யவே முடியாது. ஆனால் நீங்கள் அநீதியிழைப்பதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

ஆனால் பெற்றோர்கள் செய்த நன்மைக்கு

இதன் தொடர்ச்சி. 12-ம் பக்கம் ……

## நபிமொழி

### பெற்றோருக்கான தொண்டும் இரத்த உறவை பேணுதலும்

عَنۡ اَبِیۡ ھُرَیۡرَۃَ رَضِیَ اللّٰہُ عَنۡہُ قَالَ : جَآءَ رَجُلٌ اِلٰی رَسُوۡلِ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ فَقَالَ یَا رَسُوۡلَ اللّٰہِ ! مَنۡ اَحَقُّ النَّاسِ بِحُسۡنِ صَحَابَتِیۡ؟ قَالَ : اُمُّکَ قَالَ ثُمَّ مَنۡ ؟ قَالَ : اُمُّکَ قَالَ ثُمَّ مَنۡ؟ قَالَ : اُمُّکَ قَالَ ثُمَّ مَنۡ؟ قَالَ : اَبُوۡکَ وَفِیۡ رِوَایَۃٍ، یَا رَسُوۡلَ اللّٰہِ ! مَنۡ اَحَقُّ بِحُسۡنِ الصُّحۡبَۃِ؟ قَالَ اُمُّکَ ثُمَّ اُمُّکَ ثُمَّ اُمُّکَ ثُمَّ اَبُوۡکَ ثُمَّ اَدۡنَاکَ اَدۡنَاکَ

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும் மக்களில் நான் சிறந்த முறையில் நடந்து கொள்வதற்கு யார் அதிக உரிமை படைத்தவர்? என்று அவர் கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்) உனது தாய்! என்று கூறினார்கள். அடுத்து, யார்? என்று அவர் கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: உனது தாய்!

அடுத்து யார்? என்று அவர் கேட்டார். அப்போதும் அன்னார் (ஸல்) உனது தாய்! என்று கூறினார்கள். அவர் நான்காவது முறையாக, அடுத்து யார்? என்று கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: தாய்க்குப் பிறகு உனது தந்தை நீ அழகிய முறையில் நடப்பதற்கு மிகவும் அதிக உரிமை படைத்தவர் ஆவார். பின்னர் படிப்படியாக நெருங்கிய உறவினர்களை குறிப்பிட்டார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, ஹதீஸ் எண்:- 394)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிக்கு பிறஹகு நிகழ்ந்த சில ஸரிய்யாக்கள் மற்றும் தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அதீயே! ஒருவேளை முஸ்லிம்களுடைய வறுமை, நீங்கள் இந்த மார்க்கத்தில் நுழைவதிலிருந்து தடுக்கின்றது என்றால், இறைவன் மீது ஆணையாக! விரைவில் எவ்வளவு செல்வம் பெருக்கெடுத்து ஓடும் என்றால், அதை பெறுபவர் எவரும் இருக்க மாட்டார்,

ஒருவேளை (முஸ்லிம்களாகிய) அவர்களின் எதிரிகளின் மிகுதி உம்மை மார்க்கத்தில் நுழைவதிலிருந்து தடுக்கின்றது என்றால், அதாவது இஸ்லாத்திற்கு ஏராளமான எதிரிகள் இருக்கின்றார்கள் என்ற காரணத்தால்தான் நீங்கள் தயங்குகின்றீர்கள் என்றால், பின்னர் இறைவன் மீது ஆணையாக! ஹீராவிருந்து தனது ஒட்டகத்தில் புறப்பட்டு இந்த கஅபா இறை ஆலயத்தை பார்வையிடும் ஒரு பெண்ணைப் பற்றி நீர் விரைவில் கேள்விப்படுவீர்! அவளுக்கு எந்த அச்சமும் இருக்காது

அரசாங்கமும், அதிகாரமும் வேறு நபர்களிடம் இருக்கின்றதே என்ற இந்த விஷயம் உம்மை தடுக்கின்றது என்றால். இறைவன் மீது ஆணையாக! பாபிலோனின் வெள்ளை மாளிகைகள் அவர்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளன ; மேலும், கைஸரின் கருவூலங்கள் திறக்கப்பட்டுள்ளன என்பதை நீங்கள் விரைவில் கேள்விப்படுவீர்கள். இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை மீண்டும், மீண்டும் கூறினார்கள்

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த பயங்கரவாதிகளையும், சட்டத்தை மீறுபவர்களையும், ஜமாத்தின் எதிரிகளையும் விரைவில் பிடிப்பானாக!

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசல் 10 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **10 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மக்கா வெற்றிக்குப் பிறகும், மதீனாவுக்குத் திரும்பிய பிறகும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சில போர்த் திட்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது; அவற்றை நான் எடுத்துரைப்பேன். ஸரிய்யா கைஸ் பின் ஸஅத் பின் உபாதாவுடைய ஒரு குறிப்பு உள்ளது. இது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் ஸுதாஃவை நோக்கி நடந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஃரானாவிருந்து மதீனாவுக்குத் திரும்பியபோது, மக்களை இஸ்லாத்தின்பால் அழைக்க பல்வேறு பகுதிகளுக்கு படைகளை அனுப்பினார்கள். அன்னார் (ஸல்) முஹாஜிர் பின் அபீ உமையாவை ஏமனின் தலைநகரான ஸன்ஆவிற்கும், ஸியாத் பின் லபீதை ஹழ்ரமவ்திற்கும் அனுப்பி வைத்தார்கள்; மேலும் ஒரு படையைத் தயார் செய்தார்கள். அதன் தளபதியாக கைஸ் பின் ஸஅதை நியமித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கைஸ் பின் ஸஅத் (ரலி) அவர்களை நானூறு பேருடன் ஏமனின் ஸுதா கோத்திரத்தை இஸ்லாத்தின் பால் அழைப்பதற்காக அனுப்பினார்கள். மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுதாஃ கோத்திரத்துடன் போரிட வேண்டும் என்று கூறினார்கள். இந்த அறிவிப்பானது சரியாக இருந்தால், முதல் அறிவிப்பானது மிகவும் சரியானதாகத் தெரிகிறது, நிச்சயமாக, அன்னார் (ஸல்) இந்த நடவடிக்கையை எடுக்க காரணம் அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களுக்கு தீங்கு விளைவிப்பார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதற்காக ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டினார்கள். மேலும் ஒரு கருப்புக் கொடியை அன்னாரிடம் ஒப்படைத்ததார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அவர்கள் கனாத் பள்ளத்தாக்கின் ஒரு பக்கத்தில் முகாமிட்டனர். கனாத் என்பது மதீனாவிற்கும், உஹதுக்கும் இடையில் உள்ள மதீனாவின் மூன்று பிரபலமான பள்ளத்தாக்குகளில் ஒன்றாகும். ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் கஸ்ரஜின் தலைவரான ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் கைஸ் பின் ஸஅத் (ரலி) அவர்கள் மகத்தான ஸஹாபிகளில் ஒருவராகக் கருதப்பட்டார்கள்.

மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களிடமிருந்து கொடியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திரும்பப் பெற்றபோது, அதை அன்னார் (ஸல்) அன்னாரது மகன் கைஸ் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். அன்னார் (ரலி) மிகவும் நல்ல ஆலோசனை வழங்கக் கூடிய மற்றும் திறமை மிக்க குதிரை சவாரி செய்யும் நபராகக் கருதப்பட்டார்கள். வள்ளல் தன்மையில் அன்னார் (ரலி) மிகவும் பிரபலமானவராக இருந்தார்கள். ஸுதாஃ கோத்திரத்தைச் சேர்ந்த ஸியாத் பின் ஹாரிஸ் கடந்து சென்றபோது ஹஸ்ரத் கைஸ் கனாஃவில் முகாமிட்டிருந்தார்கள். அன்னார் சிறிது காலத்திற்கு முன்பு இஸ்லாத்தை தழுவியிருந்தார்கள். இந்தப் படை தனது கோத்திரத்தின் மீது தாக்குதல் நடத்தப் போகிறது என்பதை அன்னார் அறிந்தபோது, அந்த நேரத்தில் அன்னார் ஏன் ஆச்சரியப்படவில்லை? என்றால், இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் முஸ்லிம்களுக்கு தீங்கு விளைவிக்க விரும்புகிறார்கள் என்பதையும், இவர்கள் தற்போது அதற்கு பதில் நடவடிக்கையாக செல்கிறார்கள் என்பதையும் நிச்சயமாக அன்னார் அறிந்திருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், தனது கோத்திரம் தாக்கப்படப்போவதைக் கண்டதும், அன்னார் நேராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இவ்வாறு வேண்டினார்: தாங்கள் அனுப்பிய படையைத் திரும்ப அழையுங்கள்; நான் என் மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்; மேலும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக நான் வாக்குறுதியளிக்கிறேன். அதாவது ஒரு உத்தரவாதம் என்னவென்றால், அவர்கள் முஸ்லிம்களைத் தாக்க மாட்டார்கள்; அவர்களுக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள்; மற்றொன்று அவர்கள் படிப்படியாக இஸ்லாத்தை தழுவி விடுவார்கள்.

அன்னார் (ஸல்), அவரது வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு படையை திரும்ப அழைத்து கொண்டார்கள். இந்த விஷயத்திலிருந்தும் இது தெளிவாகின்றது. அதாவது, அன்னார் (ஸல்) அந்தப் பகுதியைக் கைப்பற்றவோ அல்லது மக்களை சிறைபிடிக்கும் நோக்கத்துடனோ படையை அனுப்பவில்லை; மாறாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக

அனுப்பினார்கள்; மேலும், முஸ்லிம்களைப் பாதுகாப்பது நோக்கமாகவும் இருந்தது. மேலும், ஹஸ்ரத் ஸியாத் பின் ஹாரிஸ்(ரலி) அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி, அன்னார் (ஸல்) செயல்பட்டார்கள்; மேலும், படிப்படியாக அன்னாரது சமுதாயத்தின் மக்கள் இஸ்லாத்தை தழுவி வந்தனர்.

பலவந்தமாக முஸ்லிமாக மாற்றுவது மட்டுமே நோக்கமாக இருந்திருந்தால், மெது மெதுவாக புரிய வர, புரிய வர இஸ்லாத்தை தழுவுவதற்கு அவர்களுக்கு அனுமதி கிடைத்திருக்காது. இஸ்லாத்தை தழுவுங்கள் அல்லது வாளை எதிர் கொள்ளுங்கள் என்று நேரடியாகக் கூறப்பட்டிருக்கும்.

எவ்வாறிருப்பினும், அதன் பிறகு, அவர்கள் மெது மெதுவாக தப்லீஃக் செய்தபோது, அந்த மக்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர், ஏனெனில் ஒரு தாக்குதல் நடத்துவது,பலவந்தமாக முஸ்லிமாக ஆக்குவது போன்றவையோ இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரானதாகும். மேலும், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் செயல்கள் மற்றும் சுன்னத்திற்கும் எதிரானதாகும். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களையே அந்த மக்களின் தலைவராக நியமித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடைய சமுதாயத்தின் மக்களுக்கு ஒரு பாதுகாப்புக் கடிதத்தையும் எழுதிக் கொடுத்து விட்டிருந்தார்கள்.

(ஷரஹுல் அல்லாமஃ அஸ்ஸுர்கானீ அலா மவாஹிபுத் துன்யா, தொகுதி 4, பக்கம் 28 - 29, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996-ம் ஆண்டு) (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 349 - 350, தாருல் குதுபில் இல்மியா, 1993-ம் ஆண்டு)

மேலும் எவர் முஸ்லிமாக ஆகியிருப்பாரோ அவருக்கு இப்படியொரு பாதுகாப்பு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியம் இருப்பதில்லை. இவ்வாறு ஏன் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், அவர்களில் சிலர் முஸ்லிம்களாக ஆகியிருக்கவில்லை.

பனீ தமீம் நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரியின் போர்ப்படை. இந்தப் போர்ப் படையைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. இந்தப் போர்ப் படையானது ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்ன் (ரலி) அவர்களின் தலைமையில் பனூ தமீம் கோத்திரத்துடன் நிகழ்ந்தது. இதன் பின்னணி என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிஷ்ர் பின் ஸுஃப்யான் (ரலி) அவர்களை குஸாஆ கோத்திரத்தின் ஒரு பிரிவான பனூ கஅபிடம், அதாவது ஸகாத் செல்வத்தை வசூலிப்பதற்காக அனுப்பினார்கள். இந்த மக்கள் ஸுக்யாஃ மற்றும் பனூ தமீம் நிலங்களுக்கு இடையில் வசித்து வந்தனர், எனவே ஹஸ்ரத் பிஷ்ர் பின் ஸுஃப்யா (ரலி) அவர்களின் உத்தரவின் பேரில், பனூ குஸாஆவின் செல்வம் எல்லா புறத்திலிருந்தும் அவர்களிடம் குவியத் தொடங்கியது. பனூ தமீம் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தனர். இந்த செல்வத்தை மிகுதியானதாக கருதி, இவர் ஏன் எங்கள் செல்வத்தை அநியாயமாக எடுத்துக் கொள்கிறார்? என்று அவர்கள் கேட்டனர். அவர்கள் தங்கள் வாள்களை உருவினர்.

பனூகுஸாஆ கோத்திரத்தார் கூறினார்: நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விட்டோம்; இது எங்கள் மார்க்கத்தின் கட்டளை ஆகும்; உங்களுக்கு என்ன பிரச்சனை?

ஆனால், இந்த பிஷ்ர் பின் ஸுஃப்யான் (ரலி) அவர்களால் ஓர் ஒட்டகத்தை கூட அடைய முடியாது என்று பனூ தமீம் கூறினார். இந்தப் போர் மற்றும் சண்டையின் நிலைமையைக் கண்ட ஹஸ்ரத் பிஷ்ர் பின் ஸுஃப்யான் (ரலி) அவர்கள் எந்த விதமான வசூலும் செய்யாமல் தாமாகவே அங்கிருந்து திரும்பி சென்று விட்டார்கள். இந்த விஷயம் பனூ குஸாஆவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. மேலும் அவர்களுக்கு வேதனையளித்தது. பனூ குஸாஆ பனூ தமீம் மீது தாக்குதல் தொடுத்தனர்; மேலும், உங்களுடன் இரத்த உறவு இல்லாமல் இருந்திருந்தால் பின்னர், உங்கள் நகரங்கள் வரை உங்களால் சென்றடைய முடிந்திருக்காது என்று கூறி அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விட்டனர். நிச்சயமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சார்பாக நமக்கு சில சோதனைகளைச் சந்திக்க நேரிடும்; நாங்கள் ஸகாத் கொடுக்கவில்லை என்று தற்போது நீங்கள் இத்தகைய விஷயத்தை கூறியுள்ளீர்கள், நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியை புறக்கணித்துவிட்டீர்கள்; மேலும், எங்கள் செல்வத்திலிருந்து ஸகாத் வசூலிப்பதைத் தடுத்து விட்டீர்கள்.

மறுபுறம், ஹஸ்ரத் பிஷ்ர் பின் ஸுஃப்யான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து நிலைமையைத் தெரிவித்தார். ‘இந்த மக்களுக்கு யார் பாடம் புகட்டுவார்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். முதலில் பதிலளித்தவர் ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்ன் (ரலி) ஆவார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்னா (ரலி) அவர்களை ஐம்பது அரபு குதிரை வீரர்களுடன் பனூ தமீம் கோத்திரத்தாரிடம் அனுப்பினார்கள், அவர்களில் முஹாஜிர்கள் அல்லது அன்ஸார்களில் எவரும் இடம் பெற்றிருக்கவில்லை. உயைனா தனது தோழர்களுடன் புறப்பட்டார்கள். மேலும், அவர்கள் இரவில் நடந்து சென்றனர்; காலையில் பனூ தமீம் தமது கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்த பாலைவனத்தை அடையும் வரை அவர்கள் மறைந்து இருந்தனர். பனூ தமீம் இந்தப் படையைக் கண்டதும், அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடி விட்டனர். பதினொரு ஆண்கள், பதினொரு பெண்கள் மற்றும் முப்பது குழந்தைகள் சிறைபிடிக்கப்பட்டு மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டனர், மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி, அவர்கள் ஹஸ்ரத் ரம்லா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர்.




(ஸுபுலுல் ஹுதா வர்ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 212. தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

பின்னர், பனூ தமீம் கோத்திரத்தின் எண்பது அல்லது தொண்ணூறு முன்னணி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தது. இந்தக் குழுவில் கோத்திரத்தைச் சேர்ந்த சில திறமையான கவிஞர்கள் மற்றும் சொற்பொழிவாளர்கள் இடம் பெற்றிருந்தனர். மக்கள் லுஹர் தொழுகைக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காகக் காத்திருந்தபோது அவர்கள் அனைவரும் பள்ளிவாசலுக்கு வந்தனர். அநேகமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வருகை தர தாமதிக்கின்றார்கள் என்று தூதுக் குழுவில் இருந்தவர்கள், கருதினர், எனவே அவர்களில் சிலர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அறைக்கு அருகில் சென்று, ‘முஹம்மதே (ஸல்) ! எங்களிடம் வெளியே வாருங்கள்‘ என்று உரத்தக் குரலில் அழைத்தனர். அன்னார் (ஸல்) வெளியே வந்ததும், இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பேசத் தொடங்கினர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், லுஹர் தொழுகையை நடத்தினார்கள். தொழுத பிறகு, பள்ளிவாசலின் முற்றத்தில் அமர்ந்தனர். ‘நாங்கள் கவிதை மற்றும் சொற்பொழிவில் உங்களுடன் போட்டியிட விரும்புகிறோம் என்று தூதுக் குழுவின் தலைவர் கூறினார். அதாவது, எந்த சமுதாயத்தின் பேச்சாளர் மற்றும் கவிஞர் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் என்பதைப் பார்க்க, நீங்கள் பேச்சிலும், கவிதையிலும் எங்களுடன் போட்டியிட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்; எங்கள் பேச்சாளர்கள் மீது நாங்கள் பெருமைப்படுகிறோம்; மேலும் எங்கள் கவிஞர்களும் நல்லவர்கள் என அவர்கள் கூறினர்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்; ‘ கவிதை மற்றும் சொற்பொழிவில் பெருமை கொள்வது எனது வருகையின் நோக்கம் அன்று; நான் எனது கவிதை மற்றும் உரையை பெருமையுடன் முன்வைக்க

வரவில்லை; மாறாக, உங்களை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்வதே எனது வருகையின் நோக்கமாகும். ஆனால் இதுவே உங்கள் வருகையின் நோக்கம் என்றால் தங்களின் கலைகளை வெளிப்படுத்துங்கள் என்று அவர்கள் கூறினர்.

அதற்கு, நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால், அதைச் செய்யுங்கள்; நாங்கள் அதற்கு பதிலளிப்போம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது, தூதுக் குழுவினர் தமது பேச்சாளர் உதார் பின் ஹாஜிப் என்பவரை முன்னால் நிறுத்தினார்கள். அவர் ஓர் உரை நிகழ்த்தினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் (ரலி) அவர்களிடம் அதற்கு பதிலளிக்குமாறு கூறினார்கள்.

அன்னார் (ரலி), எதிரிகளின் உரைக்கு பதிலாக சிறப்பான உரையை நிகழ்த்தினார்கள். அது எதிரியின் உரையை வெற்றி கொண்டு விட்டது.

(தாரீகுல் குமைஸ், தொகுதி 3, பக்கம் 4, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2009-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் அந்நேரம் சபையில் இருந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரை அழைத்தார்கள். அதன் பிறகு, தூதுக் குழுவின் கவிஞர் ஸிப்ர்கான் பின் பத்ர் என்பவர் தனது கவிதைகளை கூறினார். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம், நீங்கள் உங்களது கவிதையை கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் அவருக்கு சரியான பதிலைக் கொடுத்தார்கள்.

(ஸீரத் இப்னு கஸீர், கிதாபுல் வஃபூத் அல்வாரிதுல் தீன் இலா ரஸூல்லாஹ், தொகுதி 4, பக்கம் 81, தாருல் மஃரூஃபா, 19760-ம் ஆண்டு) (அல்பதாயத்து வன் நஹாயா, தொகுதி 5, பக்கம் 45 - 46, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் பணியை முடித்ததும், மேலும் தூதுக் குழுவினர் பரஸ்பரம் ஒன்றாக அமர்ந்தபோதும், அந்த தூதுக் குழுவுடன் வந்திருந்த அக்ரஃ பின் ஹாபிஸ் என்பவர் தம் தோழர்களுக்கு முன்னால் மெய்மறந்து இவ்வாறு கருத்து தெரிவித்தார்:

அவர்களின் சொற்பொழிவாளர் நம்முடைய பேச்சாளரை விட சிறந்தவர் ஆவார்; அவர்களின் கவிஞர் நம்முடைய கவிஞரை விட மிக உயர்ந்த தரத்தில் இருக்கின்றார்; இவர்கள் நம்மை விட மிகவும் முன்னேறியுள்ளனர்;

பின்னர், மக்கள் உரையாடி முடித்ததும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர்.

சில அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் அக்ரஃ பின் ஹாபிஸ் (ரலி) அவர்கள் சிறிது காலத்திற்கு முன்னரே இஸ்லாத்திற்கு மாறிவிட்டிருந்தார்கள், மேலும் அப்போது அவர்கள் தூதுக் குழுவினருடன் மீண்டும் வந்திருந்தார்கள்.

பனூ தமீம் மக்கள் இஸ்லாத்தை தழுவி விட்ட பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் கைதிகளைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்; மேலும், அவர்கள் அனைவருக்கும் வெகுமதிகளையும், பரிசுகளையும் வழங்கினார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, அன்னார் (ஸல்) குழுவில் இடம் பெற்றிருந்த ஒவ்வொருவருக்கும் ஐநூறு, ஐநூறு திர்ஹம்களைக் கொடுத்தார்கள்.

( தாரீகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 190, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1987-ம் ஆண்டு) (அஸதுல் காஃபா தொகுதி 1, பக்கம் 264, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2003-ம் ஆண்டு)

முன்னர் கூறப்பட்டிருந்தது போன்று, இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த உதார் பின் ஹாஜிப் என்பவர் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு சால்வையை அன்பளிப்பாக வழங்கினார். இந்த சால்வையை கிஸ்ரா பேரரசர் அவருக்கு கொடுத்திருந்தார்.

இந்த சால்வை தங்க வேலைப்பாடுகளுடன் கூடிய மிக உயர்தரப் பட்டு சால்வையாக இருந்தது என்று கூறப்படுகிறது. சால்வையின் அழகையும், மென்மையையும் ஸஹாபிகள் கண்டதும், அவர்கள் மிகவும் ஈர்க்கப்பட்டு, அதைத் தங்கள் கைகளால் தொட்டுப் பார்க்கத் தொடங்கினர். ஸஹாபிகளின் இந்த அணுகுமுறையைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நீங்கள் இந்த சால்வையைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்படுகிறீர்கள்; சொர்க்கத்தில் ஸஅதுடைய சால்வை இவற்றை விட மிக அதிகமாக மென்மையானதாகவும், மிகச் சிறந்ததாகவும் இருக்கும் என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் ஹிபா,அறிவிப்பு எண்: 2615)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவம் குறித்து பொதுவான தொனியில் கருத்து தெரிவித்துள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

சிறிது காலத்திற்குப் பிறகு, எங்கிருந்தோ சில பட்டுத் துணிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பரிசாக வந்தபோது, சில ஸஹாபிகள் அவற்றைப் பார்த்ததும், மிகுந்த ஆச்சரியத்துடன் குறிப்பிட்டனர்; மேலும், அவற்றின் மிருதுத்தன்மை மற்றும் மென்மையைக் குறிப்பிட்டு அதை ஓர் அசாதாரணமான விஷயமாகக் கருதினர். அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் இவற்றின் மென்மையைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! சொர்க்கத்தில் உள்ள ஸஅதின் ஆடைகள் இவற்றை விட மிகவும் மென்மையானவையும், மிகச் சிறந்தவையுமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகள் ஓர் உவமையின் வடிவில் இருந்தன. அதில் ஸஅத் அவர்கள் சொர்க்கத்தில் அடைந்த ஆறுதலின் அந்தஸ்தை சுட்டிக் காட்டுவதே நோக்கமாக இருந்தது,

பொதுவாக திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களிலிருந்து புரிந்து கொள்ளப்படுவது போன்று சொர்க்கத்தின் அருள்களை இந்த உலகத்தின் அருட்கொடைகளுடன் ஒப்பிட முடியாது.சொர்க்கத்தின் அருட்கொடைகளை நமது சொற்களில் பொருள் கொள்ள முடியாது. மேலும் உண்மை என்னவென்றால், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் உருவகங்கள் மற்றும் உவமைகளின் வடிவில் அருட்கொடைகளின் மேன்மையை சுட்டிக் காட்டுவதை மட்டுமே நோக்கமாக கொண்டிருக்கின்றன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 614 - 615)

அடுத்த ஓர் போர்ப் படை, ஹிஜ்ரி 9 - ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் நிகழ்ந்த குத்பஃ பின் ஆமீர் அவர்களுடைய போர்ப் படையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குத்பஃ பின் ஆமீர் (ரலி) அவர்களுக்கு இருபது நபர்களை கொடுத்து கஸ்அம் கோத்திரத்திடம் அனுப்பினார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, அவர்கள் தபாலஃவின் சுற்றுவட்டாரத்திற்கு அனுப்பப்பட்டார்கள். ஏமனின் வழிப் பாதையில் தஹாமாவின் நிலத்தில் தபாலஃ நகரம் அமைந்துள்ளது. அதற்கும், மக்காவிற்கும் இடையில் எட்டு நாட்கள் பயணத் தொலைவு ஆகும். சுமார் நூற்று ஐம்பத்தாறு மைல்கள் தொலைவில் உள்ளது. மற்றோர் அறிவிப்பின்படி, பீஷஃவின் சுற்றுவட்டாரத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் மீது திடீர் தாக்குதல் நடத்துமாறு அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். நிச்சயமாக, இந்த மக்கள் தீங்கிழைத்திருக்க வேண்டும். வழிப்பாதையில், அவர்கள் ஒரு நபரைப் பிடித்தனர்; மேலும் அவனை விசாரித்தனர், ஆனால் அவன் ஊமையாக இருப்பது போல் நடித்தான், ஆனால் அவர்கள் கோத்திரத்தை அடைந்ததும், அவன் கூச்சலிட்டு தனது கோத்திரத்தை எச்சரிக்க விரும்பினான். எனவே, இந்த ஏமாற்று

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

வேலைக்காக அவன் கொல்லப்பட்டான். கோத்திரம் ஓரளவு விழிப்புடன் இருந்ததால், அவர்கள் இரவு வரும் வரை காத்திருந்தனர், இருள் சூழ்ந்து விட்டதும், முஸ்லிம்கள் அவர்களைத் தாக்கினர். ஒரு கடுமையான போர் நடந்தது, இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர், எதிரிக் கோத்திரத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் குத்பஃ (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களாக ஒட்டகங்கள், ஆடுகள் மற்றும் பெண்களை மதீனாவிற்கு கொண்டு வந்தார்கள். கும்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கை எடுத்த பிறகு, அவர்களின் பங்கில் நான்கு, நான்கு ஒட்டகங்களும், நாற்பது ஆடுகளும் கிடைத்தன.

( முஃஜமுல் பல்தான், தொகுதி 2, பக்கம் 10 - 11, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

எவ்வாறிருப்பினும், அவர்களின் தீங்குகளை முறியடிப்பதற்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட வேண்டியிருந்தது.

பின்னர், ஸஹ்ஹாக் பின் ஸுஃப்யான் கிலாபியின் போர் படை குறிப்பு இருக்கின்றது. இது பனூ கிலாபின் பக்கம் நிகழ்ந்தது. இது ரபியுல்-அவ்வல், ஹிஜ்ரி 9-ல் நிகழ்ந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஹ்ஹாக் பின் ஸுஃப்யான் (ரலி) அவர்களை அவரது சொந்த கோத்திரமான பனூ கிலாபிடம் குர்தாஃ எனும் இடத்திற்கு அனுப்பினார்கள். குர்தாஃ என்பது மதீனாவிருந்து ஏழு நாட்கள் பயணத் தொலைவில் வசித்து வந்த பனூ பக்ரின் ஒரு கிளையின் பெயராகும். அன்னார் அவர்களை நஜ்தில் உள்ள ஸுஜ்லாஃ என்ற இடத்தில் சந்தித்தார்கள். அன்னார் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை தெரிவித்தார்கள், ஆனால் மக்கள் நிராகரித்துவிட்டனர். போருக்கான சூழல் உருவாகி விட்டது. அவர்கள் 'குர்தாஃ' வாசிகளை தோற்கடித்துவிட்டனர். மேலும், போர் செல்வத்தை பெற்றனர்.

(ஃபர்ஹன்ஙே ஸீரத் பக்கம் 233, ஸவார் அகாடமி பப்ளிகேஷன்ஸ், காரச்சி 2003-ம் ஆண்டு)

இந்த போர் நடவடிக்கையில் ஈமானை வலுவூட்டும் இந்தவொரு சம்பவமும் இருக்கின்றது. அதாவது, ஸலமஃ பின் குர்த் எதிரிகளின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். மேலும் அவர் ஒரு நிராகரிப்பாளராக இருந்தார். எனினும், இஸ்லாத்தை தழுவியிருந்த அவரது மகன் அஸ்யத் பின் ஸலமஃ முஸ்லிம்களின் தரப்பிருந்து அந்தப் படையில் இடம் பெற்றிருந்தார். முஸ்ம்களின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் எதிரிகள் தப்பியோடியபோது, ஹஸ்ரத் அஸ்யத் (ரலி) அவர்களின் தந்தை ஸலமஃவும் எதிரிகளுடன் இருந்தார். அஸ்யத் தனது தந்தையைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அன்னாரது தந்தை தனது குதிரையுடன் தண்ணீரில் குதித்து தனது உயிரைக் காப்பாற்ற முயன்றார். அன்னாரும் அவரைப் பின்தொடர்ந்தார்கள், மேலும் எப்படியாவது தமது தந்தை நரகத்திருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அன்னார் தமது தந்தைக்கு மீண்டும் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். ஆனால் தந்தை தனது மகனுக்கு பதில் அளித்தவாறு ஏசி பேசத் தொடங்கி விட்டார். இவர் தனது கிளர்ச்சி மற்றும் குழப்பம் விளைவிக்கும் நடத்தையில் நிலைத்திருக்கின்றார் என்பதைக் கண்டதும், அன்னார் தம் தந்தையின் குதிரையின் காலை வெட்டிவிட்டார்கள், மற்றொரு நபர் வந்து அவரைக் கொன்று விட்டார்.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 426 - 427, லாஹூர் பதிப்பகம்)

எனினும், மற்றோர் அறிவிப்பும் உள்ளது. அதன்படி, அஸ்யத் மதீனாவுக்கு வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபோது, அன்னாரது வயதான தந்தை அன்னாருக்கு சில கவிதைகள் அடங்கிய ஒரு கடிதத்தை எழுதினார். அதில் அவர் தனது வயதான காலத்தில் தனது மகனின் கீழ்ப்படியாமையைக் குறித்து முறையீடு செய்தார்; மேலும் தனது மகன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக அவரை சபிக்கவும் செய்தார். மேலும் எழுதினார்: உனது வயதான தந்தையை கைவிட்டு விட்டு, இஸ்லாத்தை தழுவிவிடும்படி என்னென்ன விஷயங்கள் உம்மைத் தூண்டின?

அஸ்யத் தமது தந்தையின் இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, எல்லா விஷயங்களையும் எடுத்துரைத்து, தந்தைக்கு பதில் எழுத அனுமதி கேட்டார்கள்,

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி அன்னார் தமது தந்தைக்கு ஒரு தப்லீஃக் கடிதம் எழுதினார்கள். அதைப் படித்த பிறகு அன்னாரது தந்தையும் இஸ்லாத்தை தழுவி விட்டார்கள். இந்த அறிவிப்பும் அதில் உள்ளது. மேலும் மிகவும் சரியானதாகவும் தெரிகிறது.

(அஸதுல் ஃகாபஃ, தொகுதி 1, பக்கம் 253 - 254, தாருல் குதுபில் இல்மியா, 2003-ம் ஆண்டு)

அடுத்து, ஜித்தாவின் பக்கம் நிகழ்ந்த ஹஸ்ரத் அல்கமஃ பின் முஜஸ்ஸிஸ் அவர்களின் ஸரிய்யாவை பற்றிய குறிப்பு உள்ளது. இந்த ஸரிய்யா ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரபியுஸ் ஸானீயில் நடந்ததாக இப்னு ஸஅத் எழுதியுள்ளார், அதேநேரம் வேறு சில அறிவிப்புகளின்படி ஹிஜ்ரி 9-ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் நிகழ்ந்தது. அபிஸீனிய வாசிகளில் சில போர் வீரர்கள் ஜித்தாவின் கடற்கரையில் வந்து தரையிறங்கியிருப்பதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது.

சில அறிவிப்புகளின்படி, அவர்கள் மக்காவாசிகளுக்கு எதிராக கொள்ளையடிக்க விரும்பியிருந்தனர். இந்த மக்கள் கடலைக் கடந்து முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முயன்றதாக ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஜித்தா என்பது மக்காவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அது இன்றும் உள்ளது. இது ஹிஜாஸின் ஒரு பெரிய நகரமாகும். மக்காவிற்கும், ஜித்தாவிற்கும் இடையில் 75 கி.மீ தொலைவு உள்ளது, அதே நேரத்தில் மதீனாவிருந்து ஜித்தா சுமார் இருநூற்று ஐம்பது மைல்கள் தொலைவில் உள்ளது.

அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அல்கமஃ (ரலி) அவர்களுக்கு முந்நூறு பேரைக் கொண்ட படையை கொடுத்து, அந்த நபர்களின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். அபிஸீனிய வாசிகளில் எந்த மக்கள் ஜித்தாவின் கடற்கரையில் தரையிறங்கியிருந்தார்களோ அவர்களுக்கு ஹஸ்ரத் அல்கமஃ (ரலி) அவர்களின் வருகையை குறித்து தெரிய வந்தது. அப்போது, அவர்கள் தங்களது படகுகளில் ஏறி கடலில் தப்பியோடி விட்டனர். ஹஸ்ரத் அல்கமஃ (ரலி) அவர்கள் ஒரு தீவு வரை பின்தொடர்ந்து சென்றார்கள். இந்தப் படையெடுப்பின் ஒரு சம்பவம் எடுத்துரைக்கத் தக்கதாகும், இது பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அல்கமஃ பின் முஜஸ்ஸிஸ் (ரலி) அவர்களை ஒரு படையின் தலைவராக நியமித்தார்கள்; நானும் அந்தப் படையில் இருந்தேன்; நாங்கள் எங்கள் இலக்கை அடைந்ததும், படையெடுப்பை முடித்த பிறகு, ஒரு குழு தமது தலைவரிடம் விரைவாகத் திரும்ப அனுமதி கேட்டது, எனவே அன்னார் அதற்கு அனுமதி அளித்துவிட்டார்கள். மேலும், அவர்களுக்கு அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபஃ ஸஹ்மீ என்பவரை தலைவராக நியமித்தார்கள்; அவர் நகைச்சுவையான இயல்புடையவராக இருந்தார். இந்த மக்கள் சாலையில் இறங்கினர். அவர்கள் குளிர் காய்வதற்காக நெருப்பை மூட்டினர்.

ஸுனன் இப்னு மாஜாவில் இவ்வாறு வந்துள்ளது:

நீங்கள் எனக்கு செவியேற்று, கட்டுப்படுவது உங்களின் கடமை இல்லையா?' என்று அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபஃ ஸஹ்மீ கேட்டார். அதற்கு, அவர்கள், ஏன் இல்லை?என்று கூறினர். அப்போது, 'நான் உங்களுக்கு என்ன கட்டளையிட்டாலும், நீங்கள் அதன்படி செயல்படுவீர்களா? என்று அவர் கேட்டார். அதற்கு, ஆம்! என்று அவர்கள் கூறினர். அப்போது, இந்த நெருப்பில் குதிக்க நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன் என்று கூறினார். சிலர் எழுந்து நின்று குதிக்கத் தயாராகி விட்டனர்; அவர்கள் குதிக்கப் போகிறார்கள் என்பது அவருக்கு

உறுதியாகிவிட்டபோது, நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்; ஏனென்றால் நானோ உங்களுடன் வெறும் விளையாட்டாகவே கூறினேன் என்றார். திரும்பி வந்தபோது, மக்கள் இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்தனர். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

مَنْ أَمَرَكُمْ مِنْهُمْ بِمَعْصِيَةِ اللّٰهِ فَلَا تُطِيْعُوهُ

பொருள்: இந்த அமீர்மார்களில் எவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கக் கட்டளை வழங்குவாரோ, அவருக்குக் கீழ்ப்படியாதீர்கள்! என்றார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: لَا طَاعَةَ فِى مَعْصِيَةِ اللّٰهِ

إِنَّمَا الطَّاعَةُ فِي الْمَعْرُوْفِ

பொருள்: அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதற்கு கட்டளை வழங்கினால் கீழ்ப்படியக் கூடாது. கட்டுப்படுதல் என்பதோ முற்றிலும் நன்மையான காரியங்களில் மட்டுமே உள்ளது.

(டாக்டர் ஸஹ்ராப் அன்வர் அவர்களின் துணைவியார் எழுதிய நூல், ஹமாரே ஹுஸூர் (ஸல்) அவர்கள், பக்கம் 411, தாருல் இஷாத்) (தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) தொகுதி 9, பக்கம் 432, லாஹூர் பதிப்பகம்)

மற்றோர் அறிவிப்பிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்த சம்பவம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் முன்வைக்கப்பட்டபோது, அன்னார் (ஸல்) மிகவும் கோபமடைந்தார்கள், மேலும் கூறினார்கள: لَوْ دَخَلُوهَا مَا خَرَجُوا مِنْهَا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ

பொருள்: اَلطَّاعَةُ فِي الْمَعْرُوْفِ

அவர்கள் அதில் நுழைந்திருந்தால், மறுமை நாள் வரை அவர்கள் அதிலிருந்து அதாவது நெருப்பிலிருந்து வெளியே வந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் கட்டுப்படுதல் என்பது நன்மையான காரியங்களில் மட்டுமே உள்ளது.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, அறிவிப்பு எண்: 4340)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

எந்த விவகாரங்கள் ஷரீஅத்திற்கு எதிராக இருக்குமோ அவற்றில் கீழ்ப்படிதல் கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை ஒரு நபித்தோழரை ஒரு சிறிய படையின் தலைவராக ஆக்கி அனுப்பினார்கள். வழிப் பாதையில், அவர் ஒரு செயலை செய்யுமாறு கூறினார். அதன்படி சில ஸஹாபிகள் செயல்படவில்லை. அதில் அவர் கோபமடைந்தார்; மேலும் கூறினார்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை உங்கள் மீது தலைவராக நியமித்துள்ளார்கள்; மேலும், நான் நியமிக்கும் தலைவருக்குக் கீழ்ப்படிபவர் எனக்குக் கீழ்ப்படிந்தவர் என்றும், அவருக்குக் கீழ்ப்படியாதவர் எனக்குக் கீழ்ப்படியவில்லை என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்; மேலும், நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக இருக்கும்போது, நீங்கள் ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை?

அப்போது, நாங்கள் உங்களுக்குக் கீழ்ப்படிகின்றோம் என்று நபித்தோழர்கள் கூறினர்.

அப்போது, அப்படியென்றால், நீங்கள் கீழ்ப்படிகின்றீர்களா? இல்லையா? என்பதை நான் பார்க்கிறேன் என்று அவர் கூறினார்.

ஆக, அவர் நெருப்பை மூட்டுவதற்கு உத்தரவிட்டார். நெருப்பு எரியத் தொடங்கியதும், இதில் குதித்து விடுங்கள் என்று அவர் நபிதோழர்களிடம் கூறினார். அவர்களில் சிலர் ஆயத்தமாகிவிட்டனர், ஆனால் மற்றவர்கள் அவர்களைத் தடுத்து விட்டனர்; மேலும் கூறினர்:

கட்டுப்படுதல் என்பது ஷரீஅத்(திற்கு ஏற்புடைய) விவகாரங்களில் மட்டுமே ஆகும். இவர்களோ ஷரீஅத்தை அறிந்திருக்கவில்லை; இப்படி நெருப்பில் குதிப்பதும், உயிரை விடுவதும் ஆகுமற்றதாகும். மேலும் தற்கொலை செய்தல் கூடாது என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

இந்த விஷயம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் எடுத்துரைக்கப்பட்டபோது, நெருப்பில் குதிப்பது ஆகுமற்றதாகும் என்று கூறியவர்களின் கருத்தை அன்னார் (ஸல்) ஆமோதித்தார்கள்.

அடுத்து, ஃபுல்ஸ் பனூ தே கோத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் போர்ப் படையை பற்றிய குறிப்பும் உள்ளது. ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ரபியுஸ் ஸானீ மாதத்தில் இது நடந்தது. ஃபுல்ஸ் என்பது நஜத் பகுதியின் ஒரு சிலையாக இருந்தது, மேலும் தே கோத்திரத்தினர் அதை வணங்கி வந்தனர்; அதற்கு நேர்ச்சை செய்து வந்ததுடன் அவர்கள் ஆயுதங்களையும் நேர்ச்சையாக நேர்ந்து வந்தனர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், பனூ தேயின், ஃபுல்ஸ் எனும் சிலையை அழிக்க ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நூற்றி ஐம்பது அன்ஸாரிகளுடன் நூறு ஒட்டகம் ஐம்பது குதிரையுடன் அனுப்பினார்கள். இந்தப் படையின் சிறப்பம்சங்களில் ஒன்று, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைத் தவிர, மீதமுள்ள அனைவரும் அன்ஸாரிகள். முஹாஜிர்கள் போன்றவர்களில் எவரும் இடம் பெற்றிருக்கவில்லை. பனூ தே அரேபியாவின் பிரபலமான கோத்திரமாகும். இந்த மக்கள் சிரியாவிற்கு அருகில் வசித்து வந்தனர். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஒரு பெரிய கருப்புக் கொடியையும், ஒரு சிறிய வெள்ளைக் கொடியையும் வழங்கினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அதிகாலை நேரத்தில் தாக்கி அவர்களின் சிலையான ஃபுல்ஸை அழித்தார்கள். பல கைதிகளும், கால்நடைகளும் கைப்பற்றப்பட்டன. இது பிரபலமான வள்ளல்தன்மை கொண்ட ஹாதிம் தாயின் கோத்திரமாக இருந்தது. அந்த கைதிகளில் ஒருவராக ஹாதிம் தாயின் மகள் ஸஃப்ஃபானாவும் இருந்தார், கோத்திரத்தின் தலைவரான ஹாதிம் தாயின் மகன் அதீ தப்பியோடிவிட்டார். மேலும், சிரியா நாட்டின் பக்கம் சென்று விட்டார். அபூ கத்தாதா அவர்கள் கைதிகளின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள், அப்துல்லாஹ் பின் அதீக் கால்நடைகளின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். கம்ஸ் அதாவது ஐந்தில் ஒரு பங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காகக் கொண்டு செல்லப்பட்டு, மீதமுள்ள போர் செல்வங்கள் விநியோகிக்கப்பட்டன. ஆனால், அவர்கள் ஹாதிமின் மகள் ஸஃப்ஃபானாவை விநியோகிக்கவில்லை, அவரைப் பிடித்து மதீனாவிற்கு அழைத்து வந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 124, தாருல் குதுபில் இல்மியா, 1990-ம் ஆண்டு பதிப்பு)

ஹாதிம் தாயியின் மகள் ஸஃப்ஃபானா அனைத்து கைதிகளுடன் மஸ்ஜித் நபவி பள்ளிவாயிலுக்கு அருகில் உள்ள ஒரு கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்தார். ஸஃப்ஃபானஃ மிகவும் துணிச்சலான மற்றும் புத்திசாலி பெண்ணாக இருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரது கூடாரத்தைக் கடந்து சென்றபோது, அவர் எழுந்து நின்று மரியாதை செலுத்தி, அல்லாஹ்வின் தூதரே! என் தந்தை இறந்துவிட்டார்; என் பாதுகாவலராக இருந்த என் சகோதரர் ஓடிவிட்டார்; எனவே என் மீது கருணை செய்யுங்கள்; அல்லாஹ் தங்கள் மீது கருணை காட்டுவான் என்று கூறினார். ‘உங்களின் தலைவர் யார்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள், அதீ பின் ஹாதிம் தாயி' ஆவார் என்று அவர் கூறினார். அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விட்டு தப்பியோடியிருக்கின்றாரே! அவரா? என்று கேட்டார்கள். இதைக் கூறிவிட்டு அன்னார் (ஸல்) புறப்பட்டுச் சென்று விட்டார்கள். மறுநாள், அன்னார் (ஸல்) அங்கு கடந்து சென்றபோது, ஸஃப்ஃபானா முந்தைய நாள் சொன்ன அதே விஷயத்தை மீண்டும் கூறினார். அன்னாரும் முந்தைய நாள் கொடுத்த அதே பதிலைக் கொடுத்துவிட்டு கடந்து சென்று விட்டார்கள். அவர் நிராசையடைந்தார். மூன்றாவது நாள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருடைய கூடாரத்தைக் கடந்து சென்றபோது, அன்னாரை பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள்.

திருக்குர்ஆனிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

**A. Nasir Ahmad**
**(District Ameer, Melapalayam**

நீ எழுந்து நின்று மீண்டும் உனது வழக்கை முன்வைக்குமாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஸஃப்ஃபானாவிடம் சைகை செய்தார்கள். அவர் உடனடியாக மரியாதையுடன் எழுந்து நின்று, தனது அதே கோரிக்கையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் முன்வைத்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உங்கள் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டேன்; எனவே நீங்கள் இப்போது சுதந்திரமாகிவிட்டீர்கள்; ஆனால் இங்கிருந்து வெளியேற அவசரப்பட வேண்டாம்; நம்பகமான ஒருவர் கிடைத்தால், நீங்கள் அவருடன் சிரியாவிலுள்ள உங்கள் சகோதரரிடம் அனுப்பப்படுவீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், தன் மீது கருணை காட்டும்படி அதாவது தன்னை விடுவிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்; எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் கருணை காட்டி, அவரை விடுவித்தார்கள். இதன் விளைவாக, அவர் ஒரு முஸ்லிமானார். அவர் சுதந்திரம் அடைவதற்கு முன்பே முஸ்லிமாகிவிட்டார் என்று ஓர் அறிவிப்பில் வருகின்றது; மற்றோர் அறிவிப்பு இவ்வாறும் வருகின்றது: அதாவது, அவர் சுதந்திரம் பெற்ற உடனேயே, சில நாட்களுக்குப் பிறகு, பனூ குஸாஆஃ கோத்திரத்தின் சிரியாவுக்குச் செல்ல விரும்பியிருந்த சில நபர்கள் மதீனாவுக்கு வந்தனர். அவர்களைப் பற்றி ஸஃப்ஃபானாஃ கேள்விப்பட்டதும், இந்த மக்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது; எனவே அவர்களுடன் சிரியாவுக்குச் செல்ல ,தான் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி அளித்து, அவருக்கு உடைகள், ஒரு சவாரி மற்றும் ஒரு மேலங்கியை வழங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்டு அவர் தனது சகோதரர் அதீயிடம் சிரியாவை சென்றடைந்தார்.அவர் சிரியாவை அடைந்து, தனது சகோதரனைச் சந்தித்தபோது, அவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தனது சகோதரியையும், மரியாதையையும் அங்கேயே விட்டுச் சென்றதாகவும் அவரைக் கேலி செய்தார். இதைக் கேட்ட சகோதரர் மன்னிப்பு கேட்டு, தனது அவமானத்தை வெளிப்படுத்தினார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அதீ தனது சகோதரியிடம், 'முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி உமது கருத்து என்ன? என்று கூறுங்கள்? என்று கேட்டார். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தைப் பார்த்து ஏற்கனவே முஸ்லிமாக ஆகிவிட்டிருந்த ஸஃப்ஃபானா கூறினார்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! எவ்வளவு விரைவாக உம்மால் செல்ல முடியுமோ நீர் அன்னாரிடம் செல்ல வேண்டும் என்பது எனது எண்ணமாகும்; அன்னார் உண்மையிலேயே ஓர் இறைத் தூதர் என்றால், அன்னாரிடம் விரைவாகச் செல்பவர் வெற்றி பெறுவார்; அன்னார் அரசராக இருந்தாலும், உமது கண்ணியத்திலும், மரியாதையிலும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இது மிகவும் சிறந்த கருத்தாகும் என்று அதீ கூறினார்,

பின்னர் அவர் விரைவாகத் தயாராகி மதீனாவை அடைந்தார். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். அதீ தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். வழியில், ஒரு வயதான பெண் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பேசுவதற்கோ அல்லது கேள்வி கேட்பதற்கோ தடுத்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் பேசுவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தார்கள். இந்த வயதான பெண்ணிடம் பேசியதையெல்லாம் கண்ட அதீ, "இந்த மனிதர் இந்த மூதாட்டி தடுத்து நிறுத்தியதால் இப்படி நின்ற ஒருவர் ராஜாவாக இருக்க முடியாது" என்று மனதில் நினைத்தார்; அவர் வீட்டை அடைந்ததும், பேரீச்ச ஓலைகள் நிரப்பப்பட்ட தோல் இருக்கையை அமர்வதற்காக அன்னார் (ஸல்) வழங்கியபோது, அதீ அன்னாரை அதன் மீது அமரும்படி கூறினார், ஆனால், இல்லை! நீங்கள் அதில் அமருங்கள்' என்று கூறி அன்னார் (ஸல்) சுயமே தரையில் அமர்ந்தார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த மனிதர் அரசராக இருக்க முடியாது என்று அதீ மனதில் எண்ணிக் கொண்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்), அவரிடம் உரையாடத் துவங்கினார்கள். அவருடைய மதம் மற்றும் தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பாகவும் சில விஷயங்களை எடுத்துரைத்தார்கள். இவற்றில் சில விஷயங்கள் அதீயைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது, இதனால் அன்னார் (ஸல்) உண்மையிலேயே இறைத் தூதர் ஆவார்கள் என்ற நம்பிக்கை அதீக்கு ஏற்பட்டு விட்டது. அவர் கூறினார்:

தாங்கள் உண்மையிலேயே அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது; ஏனெனில், 'சில மறைவான விஷயங்கள் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அதீயே! இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்!; நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள்!. அதற்கு, 'நான் ஏற்கனவே ஒரு மதத்தைப் பின்பற்றுபவன் ஆவேன் என்று நான் கூறினேன்; அப்போது, 'உன் மதத்தை உன்னை விட எனக்கு நன்றாகத் தெரியும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தாங்கள் என்னை விட எனது மார்க்கத்தை நன்றாக அறிவீர்களா?; இது எப்படி முடியும்? என்று நான் கூறினேன்; அன்னார் (ஸல்) கூறினார்கள், 'ஆம்! உமது மாக்கத்தை உன்னை விட எனக்கு நன்றாகத் தெரியும்.

பின்னர், அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் ரகூஸீ அதாவது கிறிஸ்தவத்திற்கும், ஸாபியத்திற்கும் இடையிலான ஒரு மார்க்கமல்லவா? அதற்கு, 'ஏன் இல்லை? என்று நான் கூறினேன்; அன்னார் (ஸல்) கூறினார்கள்:

'நீங்கள் உங்கள் சமுதாயத்தின் தலைவர் இல்லையா? 'ஆம்! என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'நீங்கள் தலைவராக இருக்கின்ற காரணத்தால் போர் செல்வங்களில் நான்கில் ஒரு பங்கை எடுத்துக் கொள்வதில்லையா?'. 'ஆம்! எனக்கு அனுமதி உள்ளது என்று நான் கூறினேன்; அன்னார் (ஸல்) கூறினார்கள்:

உங்களின் மார்க்கத்திலோ இப்படி நீங்கள் எடுப்பது உங்களுக்கு ஆகுமானதன்று.

அப்போது, நான் வெட்கத்தையும், கூச்சத்தையும் உணர்ந்தேன்.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒருவேளை முஸ்லிம்களுடைய வறுமை, நீங்கள் இந்த மார்க்கத்தில் நுழைவதிலிருந்து தடுக்கின்றது என்றால், இறைவன் மீது ஆணையாக! விரைவில் எவ்வளவு செல்வம் பெருக்கெடுத்து ஓடும் என்றால், அதை பெறுபவர் எவரும் இருக்க மாட்டார்,

ஒருவேளை (முஸ்லிம்களாகிய) அவர்களின் எதிரிகளின் மிகுதி உம்மை மார்க்கத்தில் நுழைவதிலிருந்து தடுக்கின்றது என்றால், அதாவது இஸ்லாத்திற்கு ஏராளமான எதிரிகள் இருக்கின்றார்கள் என்ற காரணத்தால்தான் நீங்கள் தயங்குகின்றீர்கள் என்றால், பின்னர் இறைவன் மீது ஆணையாக! ஹீராவிருந்து தனது ஒட்டகத்தில் புறப்பட்டு இந்த கஅபா இறை ஆலயத்தை பார்வையிடும் ஒரு

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India.
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

பெண்ணைப் பற்றி நீர் விரைவில் கேள்விப்படுவீர்! அவளுக்கு எந்த அச்சமும் இருக்காது.

அரசாங்கமும், அதிகாரமும் வேறு நபர்களிடம் இருக்கின்றதே என்ற இந்த விஷயம் உம்மை தடுக்கின்றது என்றால். இறைவன் மீது ஆணையாக! பாபிலோனின் வெள்ளை மாளிகைகள் அவர்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளன ; மேலும், கைஸரின் கருவூலங்கள் திறக்கப்பட்டுள்ளன என்பதை நீங்கள் விரைவில் கேள்விப்படுவீர்கள். இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை மீண்டும், மீண்டும் கூறினார்கள்.

அதீ கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நற்குணங்கள் மற்றும் இவை அனைத்தையும் பார்த்த பிறகு, நான் ஒரு முஸ்லிமாகிவிட்டேன்.

ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சம்பவத்தை சுயமே எடுத்துரைத்தார்கள். மேலும் இதனையும் கூறிவந்தார்கள்:

அதாவது, ஒரு பெண் ஹீராவிருந்து சக பயணியின் துணையின்றி புறப்பட்டு, பைத்துல்லாஹ்வை அவர் வலம் வந்ததை நான் கண்டேன்; மேலும், நானும் கைஸர் பேரரசை கைப்பற்றிய படையில் ஒரு பகுதியாக இருந்தேன்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் இஸ்லாமிய கட்டளைகளை மிகவும் கவனமாகக் கடைப்பிடித்தார்கள். தொழுகைக்காக எப்போதும் உளூவின் நிலையில் இருந்தார்கள்; மேலும் தொழுகையை நிறைவேற்றுவதற்கு மிகவும் கவலை கொண்டவராகவும், ஆயத்தமாகவும் இருந்து வந்தார்கள்.

ஹஜ்ஜுக்கு செல்வதற்கு ஆகுமான இரத்த உறவு உடன் இருப்பது அவசியமா? என்று மீண்டும், மீண்டும் மக்கள் கேள்வி கேட்கின்றனர். இதற்கு நான் பலமுறை பதிலளித்து இருக்கின்றேன், அது குறிப்பிட்ட சூழ்நிலையில் அவசியமானதாக இருந்தது, ஆனால், நான் ஒரு பெண் ஹீராவிலிருந்து வெளியே வருவதைக் கண்டேன்; அவள் தனியாக இருந்தாள்; அவள் கஅபாவைச் சுற்றி வலம் வந்தாள்; அவளுடன் யாரும் இருக்கவில்லை என்று அவர்கள் கூறுவதை இது ஆமோதிக்கிறது. அதாவது, மஹ்ரமின் தேவை இல்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இந்தப் படையெடுப்பிற்கு சிறிது காலத்திற்குப் பிறகு, தே கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குழு நபி (ஸல்) அவர்களுக்கு சேவை செய்ய வந்தது, அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 853- 854, அமர் அதீ பின் ஹாதிம், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு)

அடுத்து, ஜினாப் நோக்கி சென்ற உக்காஷா பின் மிஹ்ஸன் பற்றிய குறிப்பு இருக்கின்றது. இந்தப் படையெடுப்பு, ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரபியுஸ் ஸானீயில் நடந்தது. ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்களின் இந்தப் படையெடுப்பானது மதீனாவிற்கு வடக்கே சுற்றி வசித்து வந்த உஸ்ரஃ மற்றும் பல்லீ கோத்திரங்களில் நடந்தது. சில குறிப்புகளில், இந்தப் பகுதியின் பெயர் ஜினாப் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 6, பக்கம் 220, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

இந்தப் போர்ப் படையின் கூடுதல் விவரங்கள் விளக்கமாக எடுத்துரைக்கப்படவில்லை. இந்த படையெடுப்பு நடந்தது என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. .

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா அஹ்மத் பின் ஸைனீ தஹ்லான், தொகுதி 2, பக்கம் 123, தாரே அஹ்யாஃஅத் தராஸுல் அரபி, பெய்ரூத்)

தபூக் போர் பற்றிய சில ஆரம்ப விஷயங்களை தற்போது வழங்கி விடுகிறேன். இது ரஜப் மாதம், ஹிஜ்ரீ 9 ஆண்டு, கி.பி 630 வருடம், செப்டம்பர் மாதம் நடந்தது. தாயிஃப் போருக்குப் பிறகு, ரஜப் மாதம், ஹிஜ்ரீ 9-ம் ஆண்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்டார்கள். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையில் நிகழ்ந்த இறுதிப் போராக இருந்தது. தபூக் மதீனாவிருந்து சுமார் 685 கி.மீ தொலைவில் இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 842)

தபூக் என்ற பெயர் கொண்ட நீரூற்றில் தங்கியதன் காரணத்தால் இந்தப் போர் தபூக் போர் என்று அழைக்கப்படுகிறது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தபூக்கை அடைந்து, குழுவில் இடம் பெற்றிருந்தவர்களிடம் கூறினார்கள்: إِنَّكُمْ سَتَأْتُونَ غَدًا إِنْ شَاءَ اللهُ عَيْنَ تَبُوكَ

பொருள்: நாளை நீங்கள் தபூக் நீரூற்றை அடைவீர்கள், இன்ஷாஅல்லாஹ்.”.

(ஸஹீஹ் முஸ்ம், கிதாபுல் ஃபளாயில், அறிவிப்ப எண்: 706)

திருக்குர்ஆனில் தபூக் போர் سَاعَةُ الْعُسْرَةِ அதாவது, கடினத்தின் நேரம் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதனால்தான் இந்தப் போர் سَاعَةُ الْعُسْرَةِ என்றும் அழைக்கப்படுகிறது. (அத்தவ்பா: 117)

(ஸஹீஹுல் புஹாரீ, மொழிபெயர்ப்பு, தொகுதி 9, பக்கம் 300) முஸ்லிம்களுக்கு அதில் நிறைய சிரமங்களையும், கஷ்டங்களையும் சந்திக்க நேரிட்டது, உதாரணமாக, வெப்பம், தொலைதூர பயணம் மற்றும் மிகக் குறைவான சவாரிகள், வழிப் பாதையில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை போன்ற கஷ்டங்கள் இருந்தன. படையை தயார் செய்ய நிதி பற்றாக்குறையும் இருந்தது, மேலும் நிறைய சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது. இந்த அனைத்து கஷ்டங்களாலும், இது جَيْشُ الْعُسْرَةِ என்றும் அழைக்கப்படுகிறது, அதாவது கஷ்டம் மற்றும் துன்பத்தைக் கொண்ட படை.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4415)

இந்தப் பயணம் غَزْوَةُ الْفَاضِحَة என்றும் அழைக்கப்படுகிறது, இது அரபு மொழியில். فَاضِحَة அதாவது இழிவு மற்றும் திரையை அகற்றுதல் என்று கூறப்படுகின்றது, இதன் காரணமாக, பல நயவஞ்சகர்களின் நிலை தெளிவாக அம்பலப்பட்டு விட்டது, இது அவர்களின் கூடுதல் இழிவு மற்றும் திரையை அகற்றுவதற்கு காரணியாக அமைந்தது. எனவே இதற்கு இந்தப் பெயர் வழங்கப்பட்டது.

( அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 183, தபூக் போர், தாருல் குதுபில் இல்மியா, 2002-ம் ஆண்டு)

தபூக்போரின் காரணங்கள், காரணிகள் மற்றும் பின்னணி என்னவாக இருந்தன? பொதுவாக மதீனாவாசிகளுக்கு, வெளிநாட்டு சக்திகள் குறிப்பாக ரோமானியர்களின் உதவி பெற்ற பனூ கஸ்ஸானின் தாக்குதலுக்கான அபாயம் எப்போதும் இருந்து வந்தது. குறிப்பாக மேலும் ரோமானியர்கள் மற்றும் கஸ்ஸானிகள் இருவரும் ஒரு போருக்குத் தயாராகி வருவதாகவும் தகவல்கள் இருந்தன.

கஸ்ஸானீகளின் தாக்குதலுக்கான ஆபத்து மற்றும் பயம் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே எடுத்துரைக்கின்றார்கள்:

அதாவது, கஸ்ஸானிகளின் தாக்குதலுக்கு நாங்கள் எப்போதும் பயந்தோம், அதாவது, எங்களுக்கு எப்போதும் கஸ்ஸானிகளின் தாக்குதலுக்கான அச்சம் இருந்து வந்தது, அதாவது, இப்போது தாக்குதல் நடந்து விடும்; இப்போது நடந்து விடும் என்று எப்போதும் இந்த அச்சமும், எண்ணமும் இருந்து வந்தது.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 357, தாருல் குதுபில் இல்மியா, 2002-ம் ஆண்டு)

தபூக் போருக்கு உடனடி காரணமாக அமைந்த அந்த விஷயத்தை குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: ரோமானியர்கள் சிரியாவில் ஒரு பெரிய படையை ஒன்றுதிரட்டி வைத்துள்ளதாகவும், ஹிர்கல் மன்னன் அந்தப் படைகள் அல்லது கூட்டுப்படைகளுக்கான ஒரு வருட செலவை ஏற்பாடு செய்திருப்பதாகவும் சிரியாவிலிருந்து மதீனாவிற்கு ஆலிவ் எண்ணெயைக் கொண்டு வந்த வணிகர்கள் குழு முஸ்லிம்களிடம் தெரிவித்தது. அத்துடன் லக்ம், ஜுஸாம், ஆமிலஃ, ஃகஸ்ஸான் மற்றும் ஏனைய கிறிஸ்தவ கோத்திரங்களும் இணைந்துவிட்டன, அவர்களின் முன்னணிப் படைகள் பல்காஃ வரை வந்தடைந்திருந்தன. பல்காஃ என்பது சிரியாவில் டமாஸ்கஸ் மற்றும் வாதியுல்-குராவிற்கு இடையே அமைந்துள்ள ஒரு

பகுதியாகும்.
(முஃஜமுல் பல்தான், தொகுதி 1, பக்கம் 579 - 580, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்த படையெடுப்பிற்கான இரண்டாவது காரணம் இதுவாகவும் ஆனது. அதனைக் குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு கிடைக்கின்றது:

அதாவது, எந்த நபர் நபித்துவ வாதம் செய்தாரோ அதாவது முஹம்மது (ஸல்) நவூதுபில்லாஹ் அழிந்து விட்டார்; மேலும் அவரது தோழர்களை பஞ்சம் பற்றிக் கொண்டு விட்டது; அவர்களின் கால்நடைகள் அழிந்து விட்டன; தற்போது அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கும், கிறிஸ்தவத்தை வெற்றி பெறச் செய்வதற்கும் மிகவும் சரியான சந்தர்ப்பமாகும் என்று அரேபிய கிறிஸ்தவர்கள் ஹிர்கல் மன்னனுக்கு எழுதினார்கள்.

எனவே, அவர் தனது இராணுவத் தளபதியை நாற்பதாயிரம் பேர் கொண்ட படையுடன் அனுப்பி வைத்தான். அந்த தளபதியின் பெயர் கபாஸ் அல்லது ஸன்னாத் என்பதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்தப் படையைக் குறித்த தகவல் கிடைத்தபோது, ஒரு படையைத் தயார்படுத்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கட்டளையிட்டார்கள்.
(ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ அலா மவாஹிபுல் த்துன்யா, தொகுதி 4, பக்கம் 68, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996-ம் ஆண்டு)

மக்கா வெற்றிக்குப் பிறகும், ஹுனைன் போரில் மிகவும் சக்திவாய்ந்த கோத்திரமான பனூ ஹவாஸின் கோத்திரத்தை படிப்பினை மிக்க தோல்வியை சந்திக்க வைத்த பிறகும், முஸ்லிம்களுக்கு அரேபியாவைச் சுற்றியுள்ள அனைத்து கோத்திரத்தாரின் மீது வெற்றி கிடைத்த பிறகும் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் மீண்டும் ஒருமுறை ஒன்று சேர்ந்து கொண்டனர். மேலும் தங்களின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்ததைக் கண்டு, அந்தக் காலத்தின் வல்லரசான அதாவது ரோமானியப் பேரரசனிடம் அவர்கள் உதவி பெற முடிவு செய்தனர், இதற்காக அவர்கள் மிகப் பெரிய மற்றும் மிகவும் அபாயகரமான திட்டத்தை தீட்டினர்.

ஒருபுறம், அவர்கள் ரோமானியப் பேரரசரைத் தொடர்பு கொண்டனர்; மேலும், முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்கு தனது படையை அனுப்ப அவரைத் தயார்படுத்தினர். மறுபுறம், ரோமானியப் பேரரசர் முஹம்மது (ஸல்) உட்பட மதீனாவில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் அழிப்பதற்கு தனது படையை அனுப்புகின்றார் என்ற வதந்திகளை நயவஞ்சகர்கள் மதீனாவில் பரப்பத் தொடங்கி விட்டனர். இவ்வாறு நயவஞ்சகர்களும், மற்ற எதிரிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே இராணுவத்தை எதிர் கொள்வதற்காக சென்று விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உருவாகி விட வேண்டும் என்று விரும்பினர், மேலும் இரண்டு நிலைகளிலும், பயணத்தின் சிரமங்கள் அல்லது ரோமானியப் பேரரசருடனான மோதல் முஸ்லிம்கள் மற்றும் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழிவை உறுதி செய்து விடும் என்றும் அவர்கள் விரும்பியிருந்தனர்.

எப்படியிருப்பினும், இது அவர்களின் விருப்பமாக இருந்தது. இதைப் பற்றிய ஒரு நீண்ட விளக்கம் உள்ளது. அதனை இன்ஷா அல்லாஹ் நான் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன்.

இன்று, ரப்வாவில் கோல்பஜாரில் உள்ள மஹ்தி பள்ளிவாசலில் பயங்கரவாதிகள் தாக்குதலும் நடத்தியுள்ளனர், அங்கு நமது ஐந்து, ஆறு நபர்கள் காயமடைந்துள்ளனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர், மேலும் அவர்களுக்கான அறுவை சிகிச்சைகளும் நடந்து கொண்டிருந்தன. அவர்களின் நிலைமைகளை மேம்பட்டு இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக! மற்ற சில காயமடைந்தவர்களும் உள்ளனர்; அவர்களின் மீதும் அல்லாஹ் அருள் புரிவானாக!

மேலும் ஆபத்தான காயமடைந்த இருவர் இருக்கின்றனர்; அவர்களின் வயிற்றில் குண்டு பாய்ந்துள்ளது. ஒரு பயங்கரவாதியையும் நமது பாதுகாப்புப் படையினர் கொன்றுள்ளனர்; கொன்றுவிட்டனர்; ஒருவர் ஓடிவிட்டார். இதுவரையிலான அறிக்கை இதுதான். மீதமுள்ள விவரங்கள் இன்னும் கிடைக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த பயங்கரவாதிகளையும், சட்டத்தை மீறுபவர்களையும், ஜமாத்தின் எதிரிகளையும் விரைவில் பிடிப்பானாக! பஞ்சாப் முதலமைச்சரும், அரசாங்கமும் பஞ்சாபில் 100% குற்றம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன ; மேலும் தற்போது எந்த குற்றவாளியும் இல்லை என்று கூறி வருகின்றனர், ஆனால் அஹ்மதிகள் மீது அனுதினமும் தாக்குதல் நிகழ்கின்றன ; கொல்லப்படுகின்றனர்; ஷஹீதாக்கப்படுகின்றனர்; அல்லது காயப்படுத்தப்படுகின்றனர் அல்லது அவர்களின் சொத்துக்களுக்கு தீ வைக்கப்படுகின்றன ; இதனை அநேகமாக அவர்கள் குற்றங்களாகக் கருதுவதில்லை போலும்!

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்குவானாக! மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ் விரைவில் ஜமாஅத்திற்கு ஆதரவாக அடையாளங்களை வெளிப்படுத்துவானாக!

தமிழாக்கம்
முரப்பி ஷஹாபுதீன்

** * * * * *

**நபிமொழியிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசன் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

**S.S.H. Muhammed Lebbai**
**(Ameer, Melapalayam)**

1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)

வாழ்விற்காக மரணிப்பதற்குக் கூட தயங்குவதில்லை.

فَلَا تَقُلْ لَّهُمَآ اُفٍّ وَّلَا تَنْهَرْهُمَا وَقُلْ لَّهُمَا قَوْلًا كَرِيْمًا○

பெற்றோர்களை சீ என்று கூட கூறாதீர்கள். மேலும் அவர்களின் கண்ணியத்தை பாதிக்கும் பேச்சுகளை பேசாதீர்கள்.

இந்த வசனத்திலோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உரையாடப்படுகின்றது என்றபோதிலும் கூற்றின் சுட்டுப் பொருள் முஸ்லிம் சமுதாயமே ஆகும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையும், தாயும் அன்னாருடைய குழந்தைப் பருவத்திலேயே மரணம் அடைந்து விட்டிருந்தார்கள். இந்தக் கட்டளையில் ஓர் இரகசியமும் உள்ளது. அது இதுவாகும். அதாவது இந்த வசனத்திலிருந்து இதனை ஓர் அறிவுடைய ஒருவரால் புரிந்து கொள்ள முடியும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே விளித்து, நீர் உமது பெற்றோர்களை கண்ணியப்படுத்துவாயாக! மேலும் ஒவ்வொரு சொல்லிலும் அவர்களின் கண்ணியத்தையும் ,அந்தஸ்தையும் கருத்தில் கொள்வாயாக! என்று கூறப்பட்டிருக்கும்போது பின்னர் மற்றவர்கள் தங்களது பெற்றோர்களுக்கு எந்த அளவிற்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் பக்கமே மற்றொரு வசனமும் சுட்டிக்காட்டுகின்றது.

وَقَضٰى رَبُّكَ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّآ اِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا ؕ

அதாவது நீங்கள் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்காதீர்கள்! பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்! இதனை உமது இறைவன் விரும்புகின்றான். இந்த வசனத்தில் சிலை வணங்கிகளுக்கு அதாவது சிலைகளை வணங்குகின்றவர்களுக்கு புரிய வைக்கப்பட்டுள்ளது. சிலைகளுக்கு எந்த மதிப்பும் கிடையாது; மேலும் சிலைகளுக்கு உங்கள் மீது எந்த உபகாரமும் இல்லை. அவர்கள் உங்களைப் படைக்கவுமில்லை. உங்களது குழந்தை பருவத்தில் அவர்கள் உங்களை பராமரிக்கவும் இல்லை ; இறைவன் தன்னுடன் வேறு ஒருவரையும் வணங்கிக் கொள்வதை ஆகுமானதாக ஆக்கியிருந்தால் பின்னர் அவன் உங்களது பெற்றோர்களையும் வணங்குங்கள் என்று கட்டளை வழங்கியிருப்பான். ஏனென்றால் அவர்கள் உவமையான முறையில் படைத்து பரிபாலிப்பவராக இருக்கின்றார்கள். மேலும் ஒவ்வொரு நபரும் இயல்பாகவே எந்த அளவுக்கு என்றால், பறவைகளும் விலங்குகளும் கூட தத்தமது பிள்ளைகளை அவற்றின் குஞ்சுப் பருவத்தில் அவை மடிவதிருந்து பாதுகாக்கின்றன. (ஹக்கீகத்துல் வஹீ, பக்கம் 204- 205)

** * * * * *

# மஸ்ஜித் பைத்துர் ரஹ்மானின் திறப்புவிழா நிகழ்ச்சி மற்றும் கலந்து கொண்ட விருந்தினர்களின் கருத்துகள்

## வான்கூவர் - பிரிட்டிஷ் கொலம்பியா கனடா

இன்றைய நாட்களில் மார்க்கத்தின் அடிப்படையிலான அநீதியிழைத்தல் அதிகரித்துக் கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். இந்த அநீதிக்கு எதிராக கனடா நடவடிக்கை எடுப்பதும். அநீதியிழைக்கப்பபட்டவர்களின் குரலாக மாற வேண்டியதும் மிகவும் அவசியம் ஆகும் (டாக்டர் அன்ட்ரூவ் பென்னட் ஸாஹிபா)

ஹுஸூர் அன்வர் அவர்களே! கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! அன்பிற்குரிய நண்பர்களே! பிரிட்டிஷ் கொலம்பியாவில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மிகப் பெரிய மற்றும் முதல் பள்ளிவாசல் திறப்பு விழாவையொட்டி நான் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவிப்பதை என்னுடைய கண்ணியத்திற்கு காரணியாக கருதுகிறேன். ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஸாஹிப் அவர்களுக்கு இவ்வேளையில் சிறப்பு சேர்க்கும் வகையில் தனிப்பட்ட வகையில் வருக! வருக! என்று கூறி வரவேற்கிறேன்(ஜஸ்டின் ட்ரூடோ)

**(பாகம் - 4)**

கனடாவின் மார்க்க சுதந்திரம் என்ற ஓர் அமைப்பின் முதல் தூதுவர் டாக்டர் அன்ட்ரூவ் பென்னட் ஆவார்கள். அன்னார் கூறினார்கள் : இன்றைய நாட்களில் மார்க்கத்தின் அடிப்படையிலான அநீதியிழைத்தல் அதிகரித்துக் கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். இந்த அநீதிக்கு எதிராக கனடா நடவடிக்கை எடுப்பதும். அநீதியிழைக்கப்பபட்டவர்களின் குரலாக மாற வேண்டியதும் மிகவும் அவசியம் ஆகும். மார்க்க சுதந்திரம் என்பது மார்க்க விவகாரம் அன்று; மாறாக மனித இனத்தின் விவகாரம் ஆகும். அனைத்து மார்க்கங்களை சார்ந்தவர்களையும், அநீதிகளுக்கு இலக்காகின்ற மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதே எங்களுடைய அலுவலகத்தின் பணியாகும். மேலும் அவர்கள் மேலும் மனித இனத்தின் நல்வாழ்வு நம்முடைய செயல்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். மனிதன் சுதந்திரமாகவும், அமைதியாகவும், பாதுகாப்பாகவும் இறை வணக்கம் செய்ய வேண்டும். இது அவனுடைய அடிப்படை உரிமையாகும். மேலும் சுதந்திரமாக தன்னுடைய மார்க்கத்தை பிரச்சாரம் செய்வதற்குமாகும்.

அவர் கூறினார். இன்று மூன்றாவது முறையாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை நான் கூறி இருந்தேன்.

உலகில் எங்கெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அநீதியிழைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உரிமைக்காக நாங்கள் எழுந்து நிற்போம் என்பதை நான் இங்கே கூறிக் கொள்கிறேன். நான் இந்த வருடம் பாகிஸ்தான் சென்று மார்க்க சுதந்திரம் பற்றி பேசுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. நான் அங்கு சென்று மனித உரிமைகளை குறித்து பேசுவதற்கும் எனக்கு நற்பேறு கிடைக்கும். அங்கு கனடாவின் குரல் ஒலிக்கும். நான் நிறைவாக, டெல்டாவில் பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசல் திறப்பின் சிறப்பு மிகு இந்த வெற்றி விழா சந்தர்ப்பத்தில் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெறும் நிகழ்ச்சியின் இந்த சிறப்பு மிகு தருணத்தில் பங்கெடுத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கிறது. அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தமது உரையை நிறைவு செய்தார்.

செனட்டர் முபினா ஜஹ்ஃபர் கனடா மாகாணத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பிரதிநிதியாக பணியாற்றி வருகின்றார்கள். அன்னார் செனட்டில் மனித உரிமைகள் கமிட்டியிலும் பதவி வகித்து வருகின்றார்கள். மேலும் அன்னார் ஆஃப்ரிக்காவின் முதல் முஸ்லிம் பெண் செனட்டராவார்கள். மேலும் அன்னாருக்கு ஜமாஅத்துடன் நீண்ட காலமாக தொடர்பு உள்ளது. அன்னார் கூறினார்கள். இந்த மகிழ்ச்சிக்குரிய வேளையில் ஹுஸூர் அன்வர் அவர்களுக்கும், ஜமாஅத் மக்களுக்கும் நான் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### லிபரல் பார்ட்டி ஆஃப் கனடாவின் தலைவர் ஜஸ்டின் ரூடோ அவர்களின் தூதுச் செய்தி

தமது லிபரல் பார்ட்டி ஆஃப் கனடாவின் தலைவர் ஜஸ்டின் ரூடோ அவர்களின் தூதுச் செய்தியை அன்னார் வாசித்துக் காட்டினார்கள்:

ஹுஸூர் அன்வர் அவர்களே! கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! அன்பிற்குரிய நண்பர்களே! பிரிட்டிஷ் கொலம்பியாவில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மிகப் பெரிய மற்றும் முதல் பள்ளிவாசல் திறப்பு விழாவையொட்டி நான் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவிப்பதை என்னுடைய கண்ணியத்திற்கு காரணியாக கருதுகிறேன். ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஸாஹிப் அவர்களுக்கு இவ்வேளையில் சிறப்பு சேர்க்கும் வகையில் தனிப்பட்ட வகையில் வருக! வருக! என்று கூறி வரவேற்கிறேன்.

புதிய பள்ளி வாசல் பைத்துர் ரஹ்மான் நம்முடைய சமூகத்தில் முழு கனடாவிற்கும் சிறப்பு சேர்க்கும் வகையில் உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த பள்ளிவாசலானது கனடாவில் தற்போதுள்ள சமுதாயங்களை ஒரே நூலில் கோர்க்கப்பட்ட மாலையைப் போன்று ஆக்கியுள்ளது. இந்த நாட்டிற்கு சரியான வழிகாட்டுதல் மற்றும் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் உங்களுக்கு நன்றி தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த பள்ளிவாசல் கட்டுமானம் மூலமாக ஒரு புதிய கட்டடத்தை மட்டுமின்றி மேலும் பல விஷயங்களையும் நாம் அடைந்துளோம். அதாவது கடினமான வேளைகளில் மக்களுக்கு உதவி செய்வது, மகிழ்ச்சியான வேளைகளில் அனைவரையும் ஒன்றுகூட்டி மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வது போன்ற விஷயங்களுக்கு இந்தப் பள்ளிவாசல் காரணியாக அமைந்துள்ளது. உங்கள் அனைவருக்கும் இந்த தருணத்தை சந்தோஷம் நிறைந்ததாக அல்லாஹ் ஆக்குவானாக!

நான் இன்று உங்களுடன் இல்லையென்றாலும் இவை அனைத்தும் எனது எண்ணங்களின் அங்கமாகும். இன்றைய நாள் உங்களுக்கு அமைதி மற்றும் அன்பு நிறைந்த நாளாக அமையட்டும்!

ஜஸ்டின் ட்ரூடோ

நம்முடைய அடுத்த ஸ்பீக்கர் மற்றும் விருந்தினர் சூசன் ஃபென்னல் ஆவார்கள். அவர் 1988 ஆம் ஆண்டில் தம்முடைய அரசியல் கேரியரைத் துவங்கினார். மேலும் பல்வேறு துறைகளில் தொண்டு செய்து வருகிறார். அவர் 2000 ஆம் ஆண்டில் இருந்து பிராம்ன்டனின் மேயராக இருந்து வருகிறார். அன்னார் 2008 ஆம் ஆண்டு கல்கேரியில் மஸ்ஜித் நூர் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டுள்ளார். அவர் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தம்முடைய உரையைத் தொடங்கினார். அவர் தம்முடைய உரையில் பிராம்ப்டன் உடைய அழகிய பள்ளிவாசல் திறப்பு விழாவில் கலந்து கொள்வது எனது கண்ணியத்திற்கு காரணமாக இருக்கின்றது. குறிப்பாக ஹுஸூர் அவர்கள் பள்ளி வாசல் திறப்பின் போது கலந்து கொள்வது கண்ணியத்திற்கு காரணமாக இருக்கின்றது.

பிராம்ப்டனிலும் விரைவில் இதே போன்ற பள்ளி வாசல் கட்டப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்காக நான் உங்களை அழைக்கிறேன். ஒரு சமுதாயத்தின் வணக்க வழிபாட்டுத் தலத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியின் நொடிகள் கண்ணியத்திற்குரியதாக இருக்கின்றன.

டெல்டா( பிரிட்டிஷ் கொலம்பியா)வின் மிகச் சிறந்த இந்த பெரும் நிகழ்ச்சியில் வாயிலாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது, பெருமிதத்தை உணர்வது முற்றிலும் ஆகுமானதாகும் !

பிராம்ப்டன் நகரவாசிகளின் சார்பாக டெல்டாவில் உள்ள அஹ்மதிகளுக்கு மட்டுமல்ல மாறாக கனடாவில் வசிக்கும் எல்லா அஹ்மதிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பள்ளிவாசல் வருங்கால சந்ததியினர் அமைதி, இறைநம்பிக்கை மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்திற்காக நிலைத்து நிற்கும். மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மோட்டோ ' எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகை இல்லை என்பதாகும். இந்த தத்துவத்தின் செயலளவிலான அடையாளமாக இந்த பள்ளிவாசல் விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அன்னார் தமது உரையின் இறுதியில் ஹுஸூர் அன்வர் அவர்களுக்கு பிராம்படன் நகரின் சார்பில் நினைவுப் பரிசாக ஒரு நற்சான்றிதழ் பிளேட்டை வழங்கினார்கள்.

அதன் பிறகு, ஹான். ஜூடி ஸிக்ரோ பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்கள். அன்னார் தமது உரையில் நானும் எனது தோழர்களும் இங்கு வந்தது எதைக் குறிக்கிறது என்றால் நாங்கள் எந்தளவுக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை மதிக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது. நீங்களும், உங்களுடைய கொள்கையும், உங்களுடைய முன்மாதிரியும் உலகிற்கு ஓர் முன்னுதாரணமாகும். கனடாவிலும் முழு உலகிலும் எந்தளவுக்கு பள்ளிவாசல்கள் கட்டப்படுமோ அந்தளவிற்கு உலகில் அமைதி நிலை பெறும்! இதற்காக நாங்கள் அனைவரும் ஆவலாக இருக்கிறோம். ஹுஸூர் அவர்களின் முன்னிலையில் ஷ் அஹ்மதிய்யா ஜமாஅத் கனடா பிரிட்டிஷ் கொலம்பியாவில் மிகப் பெரிய பள்ளிவாசல் கட்டியதற்கு வாழ்த்துகள் கூறுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்திருப்பது எனக்கு மனதிற்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கட்டும் இந்த பள்ளிவாசல், முன்னர் கட்டப்பட்ட பள்ளிவாசலை விட பெரிதாக இருக்கிறது. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான ஆதாரமாகும்.

சந்தேகமின்றி, இது ஒரு கட்டிடம் மட்டும் இல்லை. மாறாக இது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் தனிப்பட்ட அன்பு மற்றும் கீழ்ப்படிதலை ஏற்படுத்துவதில் உதவி செய்யும் இடமாகவும் இருக்கிறது. இந்த பள்ளிவாசல் அன்பு மற்றும் ஆன்மீகத்தை முழுமைப்படுவதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கின்றது என்பதற்கு அடையாளமாகவும் இருக்கிறது. அந்த அனைத்து மக்களும் தங்களுடைய வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப ஒரு நம்பிக்கைக்குரிய ஜமாஅத்தின் பள்ளிவாசல் கட்டுமானத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மேலும் தங்களுடைய கட்டுப்படுதல், மார்க்கம் மற்றும் நாட்டிற்காக அர்ப்பணித்தல் போன்றவற்றில் ஓர் உயர்ந்த முன்னுதாரணத்தை நிலை நாட்டியது பாராட்டுதலுக்குரிய சிறப்பு அம்சமாக இருக்கிறது. மேலும் வாழ்த்துகளுக்கு தகுதியானவர்களாகவும் இருக்கிறார்கள். உங்கள் அனைவருக்கும் மிகப் பெரும் வாழ்த்துகள்!

நீங்கள் இந்த நாட்டிற்கும், இந்த உலகிற்கும் வழி காட்டிக் கொண்டே இருங்கள். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

அதற்குப் பிறகு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜின்னி ஜோகேந்திரா சிம்ஸ் அவர்கள் உரையாற்றினார்கள். அன்னாரிடம் எதிர்க்கட்சி தலைவரான தாமஸ் ஜோஸஃப் முல்கேர் அவர்களின் நற்சான்றிதழ் இருக்கிறது. அன்னார் அஸ்ஸலாமு அலைகும் என்று கூறியவாறு தம்முடைய உரையை ஆற்றத் தொடங்கினார்கள்.

அன்னார் அஸ்ஸலாம் அலைக்கும் என்று கூறியவாறு தனது உரையை தொடங்கினார். நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் இந்த நிகழ்ச்சியில் ஹுஸூர் அன்வர் அவர்களும், அரசாங்கத்தின் பிரதிநிதிகளும், பல்வேறு மார்க்க பிரதிநிதிகளும் பங்கு பெற்றிருக்கின்றனர். எனவே நான் மகிழ்ச்சியை உணர்ந்து கொண்டு இருக்கிறேன்.

அன்னார் கூறினார்கள்: மஸ்ஜித் கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது நான் தொடர்ந்து இங்கிருந்து கடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது மஸ்ஜிதை பார்த்துக் கொண்டிருப்பேன். ஆனால் இன்று நான் மஸ்ஜிதிற்கு வந்தபோது மஸ்ஜிதில் ஒரு சிறப்பான ஒளி வீசிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. மஸ்ஜித் முற்றிலும் நதிக்கரையின் ஓரத்தில் அமைந்திருக்கின்றது. இது இறைவணக்கத்திற்கு ஒரு சிறந்த இடமாகும். மேலும் இது நாம் மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். அதாவது ஒன்றுபட்ட மற்றும் வலிமையான சமூகத்தை எவ்வாறு கட்டமைப்பது என்று சிந்திக்க வேண்டும். எனது எண்ணம் என்னவென்றால் நாம் எல்லோரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியான எல்லாரிடத்திலும் அன்பு ;எவரிடத்திலும் வெறுப்பில்லை என்பதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் இந்த தூதுச் செய்தியின்படி, உண்மையான வடிவில் செயல்படத் தொடங்கி விட்டால் மேலும் நமக்கிடையில் இருக்கின்ற பரஸ்பர கருத்து வேறுபாடுகளை களைந்துவிட்டால் நமக்கிடையிலான ஒன்றுபட்ட விஷயங்களில் நாம் மகிழ்ச்சி கொள்ள முடியும். இதன் மூலம் இந்த உலகம் நமக்கும், நமது பிள்ளைகளுக்கும் ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான இடமாக ஆகிவிடும்.

அன்னார் கூறினார்கள்: இன்றைய நாள் நாம் இந்த தூய பரிசுத்தமான இடத்தில் ஒன்றிணைந்து அமர்ந்து இருக்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த புதிய வீட்டை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இப்போது எனது உள்ளத்தில் ஹுஸூர் அன்வர் அவர்களின் தூதுச் செய்தி மற்றும் மஸ்ஜிதுடன் தொடர்புடைய அந்த அனைத்து சிறப்புகளும் தென்படுகின்றன. இந்த சிறப்புகளுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்புடையதாக இருக்கின்றது. நான் விரும்புவது என்னவென்றால், இன்று நம்மில் ஒவ்வொருவரும் இங்கிருந்து இந்த பாடத்தை கற்றுக் கொண்டு செல்ல வேண்டும். அதாவது அமைதியை நிலை பெறச் செய்வதை எவ்வாறு சாத்தியமாக்க முடியும்? மேலும் எவ்வாறு இப்படிப்பட்ட முழுமையான ஒன்றிணைந்த சமூகத்தை நிலை நிறுத்துவது சாத்தியமாகும்? போன்ற விஷயங்களை நாம் சிந்திக்க வேண்டும். மேலும், நாம் நமக்கு இடையில் நிலவுகின்ற வெறுப்புகளை, கருத்து வேறுபாடுகளை சகித்துக் கொள்ளக் கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். அப்போது கனடாவின் எதிர்காலம் வலிமையிலும், வலிமையானதாக கொண்டு சென்று விடும். மேலும் முழு உலகத்திற்கும் வழிகாட்டியாக ஆகிவிடும். மேலும் உலகத்தின் பார்வை கனடாவின் பக்கம் இருக்கும். நாம் ஒருவர் மற்றவரை உண்மையான சகோதர, சகோதரிகளைப் போன்று ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் உங்கள் அனைவருக்கும் இந்த சிறப்பான பள்ளிதிறப்பு விழாவிற்காக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது நான் ஹுஸூர் அவர்களுக்கு சான்றிதழை வழங்குகின்றேன். இது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும்.

அடுத்த விருந்தினர் Mr. Jim karygiannis ஆவார்கள். அன்னார் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்கள். நான் 2010 ஆம் ஆண்டு லாகூரில் அஹ்மதிய்யா பள்ளிவாசல் மீது நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் கண்டன அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதனை முழு பாராளுமன்றமும் ஏக மனதாக ஒப்புக்கொண்டு விட்டது. மேலும் அன்னார் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தமது உரையை தொடங்கினார்கள். நமது உரையில் அன்னார் கூறினார்கள்:

இன்று நாம் இந்த பள்ளிவாசலை திறந்திருக்கின்றோம். ஆனால் நமக்கு இந்த விஷயமும் நினைவில் இருக்கின்றது.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 20 NOV 2025 Issue No. 47

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மேலும் நாம் ஒருபோதும் அதனை மறக்க மாட்டோம் ;மறக்கவும் முடியாது. அதாவது இந்த ஜமாஅத் மீது ஏராளமான இடங்களில் அநீதிகள் இழைக்கப்படுகின்றன. லிபியா , எகிப்து, இந்தோனேசியா, பங்களாதேஷ் போன்ற எல்லா இடங்களையும் விட அதிகமாக பாகிஸ்தானில் இந்த சமூகத்தின் மீது உச்சபட்ச அநீதிகள் வைக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. பாகிஸ்தானில் நீங்கள் அஹ்மதியாக இருக்கின்றார் என்றால், பின்னர் அல்லாஹ்தான் உங்கள் மீது கருணை காட்ட வேண்டும்; நீங்கள் மிகவும் கடினமான நிலையில் இருக்கின்றீர்கள். நீங்கள் வீட்டிலிருந்து வெளியேறுகின்றீர்கள் என்றால் பின்னர் நீங்கள் திரும்பி உங்களுடைய வீடுகளுக்கு வெற்றிகரமாக சென்றடைந்து விடுவீர்களா? மாட்டீர்களா ?என்பது உங்களுக்கு தெரியாது. இதுதான் பாகிஸ்தானில் அஹ்மதிகளின் நிலையாக இருக்கின்றது. அன்னார் கூறினார்கள்:

நீங்கள் எந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள்; மேலும் நீங்கள் எந்த மார்க்கத்தை பின்பற்றுவிழா இருக்கின்றீர்கள்; மேலும் நீங்கள் எந்தப் பிரிவை சார்ந்தவராக இருக்கிறீர்கள் என்பதற்கு எல்லாம் அப்பாற்பட்டு உங்களுக்கு முழுமையான முறையில் இறை வணக்கத்திற்கான அடிப்படை மனித உரிமை கிடைக்கப் பெற வேண்டும். அதற்காக நாம் அனைவரும் இணைந்து மிக அதிகமாக முயற்சி செய்ய நேரிடும். ஒரு நீண்ட காலம் வரை மனித உரிமைகள் அதில் குறிப்பாக மார்க்க சுதந்திரம் மற்றும் பத்திரிக்கை சுதந்திரமும் அடங்கும்- இவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. பல சமுதாயங்கள் ஒரு நீண்ட காலமாக இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. ஜி-8 நாடுகள் மற்றும் ஜி 20 நாடுகளின் அமைப்புகளில் பங்கு வகிக்கக்கூடிய உறுப்பினர்களில் ஒரு நாடாக இருப்பதன் காரணமாக இது கனடாவின் பொறுப்பாகும். அதாவது எந்த நாடுகள் மனித உரிமைகளை பேணுவதில்லையோ அவர்களுக்கு கனடா எடுத்துரைக்க வேண்டும். அவர்கள் இதனை பேணாமல் இருந்தால் தங்களது நிலைகளை சரியாக்கிக் கொள்ளவில்லையென்றால் பின்னர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நாம் இந்த அமைப்புகள் அல்லது நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். எந்த நிறுவனங்கள் எல்லாம் இந்த நாடுகளின் அங்கங்களாக இருக்கின்றனவோ அவற்றுடன் தொடர்பு கொள்ள வேண்டும். உதாரணமாக பாகிஸ்தான் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கின்றது. நமது பொறுப்பு இதுவாகும். அதாவது அடிப்படை மனித உரிமைகளை எந்த நாடுகள் பின்பற்றுவதில்லையோ அந்த நாடுகள் வரை கடுமையான தூதுச் செய்தியை எட்ட வைப்பது நமது பொறுப்பாகும். அன்னார் இறுதியில் நிறைவாக கூறினார்கள்: ஹுஸுர் அன்வர் அவர்கள் மஸ்ஜிதை திறந்து வைப்பதற்காக கனடாவிற்கு வருகை தந்துள்ளார்கள். எனவே நான் அவர்களை கனடாவிற்கு பார்லிமென்ட் சார்பாக மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இதன் பிறகு, Mr. Rob Noris அவர்கள் தமது உரையை முன் வைத்தார்கள். அன்னார் Legislative Assembly of Saskatchewan -ன் உறுப்பினர் ஆவார்கள். தமது மாநிலத்தில் Minister of Advanced education மற்றும் Employment and Immigration துறையிலும் பணி செய்துள்ளார்கள். அன்னாரும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி உரையை தொடங்கினார்கள்.

அன்னார் கூறினார்கள் :

நான் இந்த அழகிய பள்ளிவாசல் திறப்பு விழாவில் கலந்து கலந்து கொள்கின்றேன். இதற்கான கண்ணியம் எனக்கு Saskatchewan அரசாங்கத்தின் தரப்பிலிருந்து எனக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

Saskatchewan ஏராளமான மக்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயர்ந்த பண்புகள் Saskatchewan உடைய மாடலுக்கு மேலும் வலு சேர்க்கின்றது. குறிப்பாக எங்களது குழந்தைகள், எங்களது குடும்பங்கள் மற்றும் ஏனைய பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் Saskatchewan நகரின் அஹ்மதிகளின் முக்கிய பங்களிப்பு இருக்கின்றது. கனடா தினம் சந்தர்ப்பத்ததின்போது, அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்றது. நாம் அனைவரும் ஒன்றாவோம்; மேலும் ஒன்றுபட்டு பணி செய்வதற்கு என்ன முக்கியத்துவம் உள்ளது? போன்ற விஷயங்களை இந்த நிகழ்ச்சி உறுதி செய்கின்றது.

அன்னார் நிறைவாக, மாநிலத்தின் மேயர் சார்பாக மஸ்ஜித் திறப்பு விழாவையொட்டி ஹுஸுர் அன்வர் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள். **(தொடரும்...)**

** * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (தஃப்ஸீரே கபீர்)**

பகரமாக நன்மை செய்ய முடியும். எனவே அவர்கள் தொடர்பாக இந்த நேர்மறையான கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் பெற்றோர்களுக்கு தொண்டாற்றும்படி சிறப்பான கட்டளைகளை வழங்கி உள்ளது அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ا مَنْ ادرك احد والديه
ثم لم يُغْرَله فابعده الله عزّوجّل

அதாவது எந்த நபர் தமது பெற்றோர்களின் ஒருவருக்கு தொண்டாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்த பிறகும் அவர் தனது பாவங்களுக்காக இறைவனிடம் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் பின்னர் இறைவன் அவர் மீது சாபமிடுகின்றான். இதன் பொருள் என்னவென்றால் நன்மைக்கான உயர்தரமான சந்தர்ப்பம் கிடைத்த பிறகும் அவர் இறைவனுடைய அருளை பெற முடியவில்லை என்றால் பின்னர் சொர்க்கம் வரை சென்றடைவதற்காக அப்படிப்பட்ட நபருக்கு வேறு எந்த வழிமுறையும் இல்லை.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 321, காதியான் பதிப்பு, 2010 ம் ஆண்டு பதிப்பு)

** * * * * * *


**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad